உ

கற்பகவிநாயகர் துணை.

# வள்ளியம்மைகல்யாணம்

ஆனந்தக்களிப்பு.

இவை,

மதுரைஜில்லா கடையூரைச்சேர்ந்த பரிபூர்

விநாயகர்கடாக்ஷ வித்துவான்

சி. இராமசுவாமி அய்யங்காரவர்களால்

இயற்றப்பட்டு.

இஃது,

திரிசிரபுரம்

ஸெண்ட்ஜோஸப்காலேஜ் பெண்கள் ஸ்கூல்

தமிழ்பண்டிட்

மு. சுப்பிரமணியபிள்ளையால்

பார்வையிடப்பட்டு.

திருச்சிராப்பள்ளி-புக்ஷாப்

அ. மாமுண்டிபிள்ளை

அவர்களால்.

S. N. V. Press.

விலை] 1910 [அணா 4.

MADRAS.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

உ

கற்பகவிநாயகர் துணை.

# வள்ளியம்மைகல்யாண

## ஆனந்தக்களிப்பு.

இவை.

மதுரைஜில்லா கண்டனூரைச்சேர்ந்த பாலையூர்

விநாயகர்கடாக்ஷ வித்துவான்

**சீ. இராமசுவாமி அய்யங்காரவர்களால்**

இயற்றப்பட்டு.

இஃது.

திரிசிரபுரம்.

செண்ட்ஜோஷப்காலேஜ் பெண்கள் ஐஸ்கூல்

தமிழ்பண்டிட்

**மு. சுப்பிரமணிய பிள்ளையால்**

பார்வையிடப்பட்டு.

இவை.

திருச்சிறப்பள்ளி-புக்ஷாப்

**அ. மாமுண்டி பிள்ளை**

அவர்களால்.

S. N. V. PReSS.

1910.

MADRAS.

விலை] [அணா-4.

ரிஜிஸ்டர்காப்பிரைட்.

30 SEP 1910 MADRAS

உ

கற்பகவிநாயகர் துணை.



# வள்ளியம்மை கல்யாண ஆனந்தக்களிப்பு.

### விநாயகர் துதி காப்பு விருத்தம்.

சிவமுனியால்மான்வயிற்றிற் பிறந்தவள்ளி
சிற்அரில்குமரராசன் வேடனென்போன்
அவனிடத்தில்வளரத் திருத்தணிகைவேலன்
அதிவேடன்வேங்கைமர மாகிப்பின்னும்
தவசியதாய்வந்தவள்ளி மாலைசூட்டுஞ்
சரித்திரத்தைஆனந்தக் களிப்பாச்சொல்ல
அவனிசராசரங்களெல்லாம் வணங்கிப்போற்றும்
அத்திமுகத்தைங்கரனுங் காப்புத்தானே.

### வெண்பா.

கேழ்க்கவேயின்பம் கிடைக்குமேகண்ணாலே
பார்க்கவேசெல்வம் பாலிக்குமே-நேர்க்கமனம்
அற்புதங்களுண்டாகும் ஆகாப்பிணிநீங்கும்
கற்புள்ளவள்ளி கந்தன்கதை.

## ஆனந்தக்களிப்பு.

[illegible] தானந்தனதந்தன — தந்த
தானதனதந்தனதந்தனனா

தையல்-திருமருவும்வள்ளிகணவன் கூற-எந்தன்
சித்தமதிலேசிவ பத்திப்பிரேற ௧

மேன்மை-தரும்பதவி வேலவ தருள்வானே-மலைவாள்
தம்பிக்கிழுத்தவனே தும்பிக்கையானே ௨

நாளும்-கந்தனனந்தகவி பாட-சூலி
கலைமகளுந்திருமகளும் மலைமகளுந்நாட ௩

யார்க்கும்-விந்தையுள கவிமாரிபெய்ய-அந்த
வேலவனுந்திருமாலனு கூலமதைசெய்ய ௪

அழகு-வடிவேலர்செய்த விளையாட்டு-நானும்
வழுத்தவேமானிடர்க ளழுத்தமாக்கேட்டு ௫

வளரும்-துடிமிகுதி சிந்தனைமுண்டாக-நானும்
துணிந்தேனேபரமனையும் பணிந்தேனிடர்போக ௬

யெந்தன்-மனம்வந்தபடிகவிநான்செப்ப-சாக்கை
வீரசத்திதுணையாக வரவேணுமிப்ப ௭

யின்பம்-நனவுஇன்சமதுரமொழி சொல்லு-தீங்கு
நாடாமல்வேலர்கதை பாடவேநில்லு ௮

பாட்டு-கவியினுளபொருளுமறியேனே-கதை
கட்டாகச்சிந்தைகள் மெட்டாச்சொல்லேனே ௯

மிக்க-புவிதனிலேநாவலர்பொருப்பீர்-கவி
புன்சொல்லாயிருந்தாலும் யின்சொல்லாதரிப்பீர் ௰

கான-மயிலாட வான்கோழியாடும்-பேசும்
வடுப்பாகமதலைசொல்லு மெடுப்பாரன்போடும் ௰௧

கூவும்-குயில்கருடன்பறவைக ளிருக்கும்-அற்ப
கொசுகானமசகமது யிசையாப்பறக்கும் ௰௨

முன்பு-கதையனேகமிருக்கையிலே நன்று-அற்ப
கவியிதுவும்வேணுமோ புவிதனிலேஎன்றால் ௰௩

பெரிய-நதியாழிபூமியிலிருந்தால்-குட்டம்
நாடுதனில்வேண்டாமோ கேட்டதுமருந்தா ௰௪

மின்னும்-சோதிவளர்பூமிதனி லுள்ளார்-பாலே
சிறியன்ராமசாமிசொல்லைப் பரியாசமாய்த்தள்ளார் ௰௫

நல்ல-மேனைதவழ் செய்யுங்காவேரி-ஊர்ந்து
மெள்ளவரும்வாய்க்கால்நீரைத் தள்ளாததுபாரீர் ௰௬
கெட்ட-மடமையுள மனதுபசு நினைவு-நீயும்
வையாமற்கேள்வள்ளி தெய்வக்கதைகனிவு ௰௭
அன்ன-நடையழகி மதாரமொழியாளே-யார்க்கும்
நல்லவடிவேலன்கதை சொல்லுவேன் கேளே ௰௮
முதல்-ஆதிஅரிநாரணனு முண்டு-அவர்
அருந்தவத்தால்வேலவர்க்காப் பிறந்தபெண்கள் ரெண்டு ௰௯
பத்தி-நீதிசடாக்ஷரத்தையவ ரோதி-சேயே
நீக்கிவைகுண்டமதுக் கேகினர்மால்சோதி ௨௰
பெண்கள்-கந்தனடிகதியெனவே யெண்ணி-பெண்கள்
கடியமனஞ்செய்திருக்கக் கொடியதவம்பண்ணி ௨௧
தேவர்கோ-யிந்திரனும் பவனிவரக்கேளே-அவ
னேறிவரும்வெள்ளானை நாரிமூத்தாளே ௨௨
தும்பிக்-கையாலேயானையு மெடுக்க-யிந்திரன்
கண்டுதெய்வானையெய ரென்றுமேகொடுக்க ௨௩
உருதி-மெய்யகலுஞ்சூரிடம் வந்தார்-அவ்வரை
வென்றுமேதிருப்பரங் குன்றதிலிருந்தார் ௨௪
உம்பர்-தேவர் திருப்பரங் குன்றம்வந்தார்-அந்தத்
தெய்வானையேமணமுஞ்செய்தார் முருகருந்தான் ௨௫
அண்டர்-யாவர்களுமிருப்பிடத்துக் கேக-தெய்வ
யானையுடன்கந்தமா தனமுருகன்போக ௨௬
வாச-மருவுலவுங் கந்தமலைநன்று-மனை
வஞ்சிவிளையாடிவரச் கொஞ்சநாள்சென்று. ௨௭
மந்திரம்-உருச்செபிக்கும் வள்ளிதவம் பெருக்க-தவம்
ஓட்டியேவேலனையுங்கட்டியேயிழுக்க ௨௮
வேலர்-பாங்குவந்து வள்ளிமுகங்கண்டார்-பெண்ணை
படித்துயரமதைச்சொல்லு கடுந்தவமேதென்றார் ௨௯
எங்கும்-சிரங்கலரமெதுவேனுஞ் சொல்லு-பூமி
திட்டானவடக்கேட்டுக் கட்டாதேமல்லு ௩௰
கந்த-சாமியுள்ளமறியாதோ சொலி-என்சொல்
தட்டாமலென்னையுங்கீர் கட்டவேஹுக்தாவி ௩௧
சொல்வார்-ஆமிதுவும் நல்லவரங்கேட்டாய்-நானும்
அப்படிசொன்னால் தவசு விட்டுவிடமாட்டாய் ௩௨

அடி-எனக்கிசையுந்தெய்வானைமுந்தி-யொருத்தி
யிருக்கிறாளிருந்தாலு முருக்கமாப்பிந்தி ௧௩
நானும்-உன்னைமணஞ் செய்வதும்தப்பாது-அதுக்கு
ஒப்பானவழியொன்று செப்புவேனிப்போது ௧௪
பாரு-கூறுவேனினிக்கே ளலங்காரீ-நல்ல
குறக்குலத்தில்குமராச னிருக்கிறான்சிற்றூரில் ௧௫
விட்டு-பேருதசெல்வங்குறைந் வில்லை-ஒரு
பெண்ணில்லாமலென்னையவன் பண்ணுகிறான்சள்ளை ௧௬
அவனுக்கு-ஏழுமக்களிருந்துமின்ன மாசை-பெண்ணை
யெண்ணிஎனைகொந்துநிதம் பண்ணுவான்பூசை ௧௭
மனு-ஆளும்பரதேசிகளுக் கன்னம்-குமரன்
அடுத்தவரையாதரித்துக் கொடுத்திடுவான்சொர்ணம் ௧௮
அடி-மொய்குழலியுன் னுயிர் துறந்து-சிவ
முனியாலேமான்வயிற்றில் கனிவாய்ப்பிறந்து ௧௯
மனத்-தயவுகுமரனும் உனையெடுப்பான்-வளர்த்து
தையலேஉன்னைஎந்தன் கையிலேகொடுப்பான் ௨௰
மன்றல்-வரங்கொடுத்துவேலரு மகன்றார்-மோக
வள்ளியுமக்கினியாங் கொள்ளியில்புகுந்தாள் ௨௧
விச்சேத்-திரமான வள்ளிமலையோரம்-யோக
சிவமுனியுஞ்சிவனைநோக்கித் தவமிருந்தநேரம் ௨௨
சிவந்த-பொன்னிறங்களுற்றபெண் மானும்-மனம்
பூத்துவிளையாடையிலே பார்த்தார்முனிதானும் ௨௩
முனி-மனமோகமுற்றுவிளி நாட-அந்த
மானுக்குங்கருத்தரித்துக் கானவழியோட ௨௪
பத்து-மாதமும்வந்துவலி தோண-விளையும்
வள்ளிக்குழிதனிலே பிள்ளையேமானீண ௨௫
அழகு-சோதியுள மதலைகுறல்கேட்டு-மானும்
துள்ளிமனுப்பெண்ணெனவே தள்ளிசேயைப்போட்டு ௨௬
காடு-மலைநாடிமானும்வெருண் டோட-குமரன்
வந்துமேபயிரிட உகந்தநிலந்தேட ௨௭
யாரும்-விலைமதிப்பாமதலைக்குரல் கேழ்க்க-சிற்றூர்
வேடராசன்வேகமதா யோடிபெண்ணைப்பார்க்க ௨௮
அழுத-குழந்தையை முகந்துமேஎடுத்தான்-அதைக்
கொண்டுவந்துமனைதனிலே பெண்டுகைகொடுத்தான் ௨௯

சாமி-பழனிதந்தபைங்கிளியே வாங்க-கொங்கை
பசுரம்போடிவிம்மிப் பால்கசிந்துபொங்க ௫௰

பாலும்-துள்ளமுர்தமீந்துமே வளர்த்தார்-வந்த
துயரகற்றும்வள்ளியெனப் பெயரதுங்கொடுத்தார் ௫௧

எடுத்த-வள்ளிக்குளிதனிலே பெண்ணே-வேடன்
வாரியதால்வள்ளியென்றே கூறினுன்கண்ணே ௫௨

பெண்கள்-தாலாட்டிப் பலபணிபூட்டி-வள்ளி
தனக்குமேபாலமுர்த மிணக்கமார்பூட்டி ௫௩

உயர்ந்த-சேலைமையுடுப்புகள்பூ மாலை-அலைதச்
செப்பதியமாகவருஞ் சுப்பர்செயலாலே ௫௪

தனக்கு-தேவையுள்ள பாஷைகடையுற்றுள்-பணச்
செல்விஎழுவயதுதனில் கல்விகளுங்கற்றுள் ௫௫

பேசும்-நாவுருசிபால்பழமு மன்னம்-புலா
நாற்றமதைவள்ளிகண்ணுல் பார்த்தால்மனங்குன்றும் ௫௬

வேதம்-கலைதிகழுங் கந்தன்வாசனையும்-பத்தி
கருதிவினைசங்கித முருதிபோதனையும் ௫௭

ண்ட-பிலவயது பசிரெண்டு மாச்சு-தனம்
பெருத்தருது ாகிச்சய கருத்துகளுமுண்டாச்சு ௫௮

விளையும்-தினைக்கொல்லைகார்க்கமனங்கொண்டாள்-வள்ளி
சித்தம்போல் ற்றவ ரடுத்துக்கேட்கின்றூர் ௫௯

நம்-மனைக்கிசைந்த வள்ளிமடமானே-நலம்
வாய்ப்பானசேதியொன்றுக் கேட்பாய்நீதானே ௬௰

வள்ளி-நம்மருக்குந் தினைக்கொல்லையுண்டு-நீயும்
ஞாயம்போலேயதிலே போயிருந்துகொண்டு ௬௧

மகளே-அம்மாகதிர்மேயவரும் பட்சி-நீயும்
அங்கதைவிரட்டியே யெங்களைநீரெட்சி ௬௨

ாவல்-சுற்றியேதினைக்கொல்லை காப்பார்-பெண்கள்
துணையுண்டு கண்ணுக்குநிமைபோலேபார்ப்பார் ௬௩

ங்கள்-நித்தமுஞ் சோறுபலகாரம்-மடி
வைத்துமேயுனைத்தூக்கி முத்தமிடவாரோம் ௬௪

ம்மா-இப்புவியில் நமக்கெதிரியாரு-அச்ச
மில்லாமலேதினைக் கொல்லையைநீ கா ௬௫

கட்ட-தப்பிலிக்குத் துசிரசி ரெண்டா-அச்ச
றியாதாஉனக்குமது தெரியாததுண்டா ௬௬

உனக்கு-மகராசனுனுடே யிருக்க-எழு
மக்களுஞ்சேனைநாலு பக்கமுமிருக்க ௬௭
இந்த-செகமுழுதும்நாசனேயா சாட்சி-வளந்
தேன்பாயுஞ்சிற்றூரில் காண்பாய்கண்காட்சி ௬௮
தகப்பன்-சொல்லவேவள்ளியும் ஓமென்றாள்-உங்கள்
சொல்படியேயென்மனமும் அப்படியேயென்றாள் ௬௯
பூக்கும்-முல்லையணிமள்ளரு மெழுந்தார்-நல்ல
முனத்திலேயிருக்குந்திணைப் புனத்திலேபுகுந்தார் ௭௰
கந்தன்-வள்ளிக்கிசைந்தபரன் போட-ராமர்
வானரம்போல்வனந்தனிலே கானவர்கள்சாட ௭௧
வேடர்-துள்ளிவெட்டிமரங்களை யொதுக்கி-வேடர்
சுயமாகவேமெத்த நயமாகச்செதிக்கி ௭௨
புனத்தில்-செவ்வையா நாலுமரம்நட்டு-குறவர்
சித்திரங்கள்செய்தபெட்டு உத்திரங்கள்விட்டு ௭௩
பரண்-ஒவ்வியஅட்டவணை சேர்த்து-பலகை
ஒழுங்குஉயர்நாலுபக்கம் உட்புறமுஞ்சேர்த்து ௭௪
பார்க்கும்-சன்னலுடன் தாள்கதவுநாலு-வேடர்
தாட்டிகமாய்வீட்டிலுச்சி நாட்டிகுத்தக்காலு ௭௫
அழகு-பொன்னதிய பாச்சுமரம்விட்டார்-வரிச்சப்
பூட்டிஓடு மாட்டிகும்பம்காட்டி மகிழ்ந்திட்டார் ௭௬
மனம்-யிச்சைதரும்படியிருக்கு மேனி-அதை
யிறக்கவுமேத்தவுந் திருக்குமுருக்காணி ௭௭
சிறந்த-பச்சமே பூதிபன்னீரு-வள்ளி
படித்துவரும்புத்தகமும் குடிக்குந்தண்ணீரு ௭௮
உசந்த-பட்டுகளும்உடுப்புகளு சேலை-வள்ளி
பாடியதம்பூருவீணை ஆடியஊஞ்சலாலே ௭௯
குவிச்சி-கட்டிலுபாய் திண்டொலுருமெத்தே-மஞ்சள்
கண்ணாடிமைசிப்பு எண்ணெயிகளும்வைத்தே ௮௰
வள்ளி-அழகுதனரவுக்கையுஞ் சந்தனமும்-சிறந்த
அங்கமுளமணிப்பொட்டு குங்குமசூரணமும் ௮௧
வீசும்-களபமது கஸ்தூரிஏலம்-கந்தக்
காம்புடனேவால்மிளகு கிரும்புதாம்பூலம் ௮௨
எரியும்-விளக்குகளுங் கடலாசிப்பூவும்-கனியும்
மிக்கதியபலகாரஞ் சக்கரைதேன்மாவும் ௮௩

ல-குளிரேரும்பாலுமிழ நீரை-விசிறி
குற்றமில்லாநகை பணிதிவைத்தார்கள்வேரை ௮௪
றார்-மனைக்கேகி வள்ளிதனைவாழ்த்தி-வேடர்
வல்லமையாம்வள்ளியையும் பல்லாக்கிலேத்தி ௮௫
யில்-தினைப்புனத்தில் பரண் தனிலேவைத்து-வள்ளிச்
செல்லமேஎன்றுகவண் கல்லையுங்கொடுத்து ௮௬
ந்து-வரும்பறவைவிலங்கையு மதட்டு-பரண்
மதிலிருந்துகவண்கல்லா விதமாய்விரட்டு ௮௭
டம்-யிருந்துவாழ் மனைபோனேரந்தாயே-காலும்
யிடைவிடாமலேவருவம் விடைகள்தருவாயே ௮௮
லா-மனமொப்பி வள்ளியிருந்தாளே-வேடர்
மனைசென்றார்கதையுமினி நினைவாகக்கேளே ௮௯
ய-களம்பொருந்துங் கந்தமலைமெய்யன்-வள்ளிக்
கண்ணேமணஞ்செய்யமன மெண்ணிமுருகையன் ௯௰
ன-போதம்வருங் கந்தமலைவிட்டு-மனப்
பொருத்தமதிலேயதியக் திருத்தணிகைதொட்டு ௯௧
த-நாதர்திருத்தணிகையி லிருந்தார்-தெய்வ
நாரதரும்வள்ளிமலை யோரமதில்வந்தார் ௯௨
ளி-ஆலோலமென்றசெவி கேழ்க்க-முனி
அக்கரையாயோடிவேலர் சர்க்கரையைப்பார்க்க ௯௩
-மாஅதவும்வள்ளியிவள் கன்னி-நமக்கு
மாதரயிவள் [illegible] துவோவென்றெண்ணி ௯௪
னி-வேகமுடன்திருத்தணிகை வந்தார்-அரி
விண்டுமருகனையுமுனி கண்டடிபணிந்தார் ௯௫
கும்-ஏகபராபரனே எனையாளும்-காணும்
யிப்போதுகண்டதையுஞ் செப்புவேன்கேளும் ௯௬
வி-வந்தேனுன் வள்ளிமலைமேலே-உருக்கி
வார்த்ததுபோலொருபெண்ணைப் பார்த்தேன்கண்ணாலே ௯௭
ன்னே-முந்தியரிமகள் தவசிருந்தாள்-உங்கள்
மொழிப்படியேவேடரிடங் களிப்புரவளர்ந்தாள் ௯௮
த-கண்டுகொணிருந்தேன் முன்னாலே-யிப்பக்
கதிர்க்காக்கப்பரண்கட்டி யிருக்குறாள்தன்னாலே ௯௯
-வண்டுமயிரழகி ருதாவாளுள்-சாமி
மணஞ்செய்யத்தடையில்லை குணத்திரும்பிப்போனான் ௱

வள்ளி-யிருந்துதவஞ் செய்தவளேசாமி-மாலை
யிட்டுவருதபோனல் திட்டாதேர்பூமி ௱௧

சிவனை-வருந்திதவமுயர்ந்தமுனி செப்ப-செங்கை
வடிவேலர்முனிவர்சொன்னபடியேமனமொப்ப ௱௨

தெய்வ-நாரதரும்விடைவாங்கிப் போக-வேலர்
நன்றாகச்சிலகாரூஞ் சென்றதன்பின்பாக ௱௩

வேலர்-கார்மேனிவனவேடன்போலே-ரூபங்
காட்டியேசிராவு மாட்டித்தலைமேலே ௱௪

முடி-கோணியகொண்டையாய் முடித்தார்-வேலர்
கொந்துமுத்துமாலையதில் வைத்தயலங்கரித்தார் ௱௫

வேலர்-நாணியவில்லையு மெடுத்தார்-செக
நாதரிருகுண்டலமுங் காதிலேதொடுத்தார் ௱௬

அலரும்-சிலம்புதண்டை காலில்மிதியடியும்-மகா
தேவரொட்டுச்சல்லடமு மேவளரிதடியும் ௱௭

முருகர்-நலமேதருங் காமதில்மோதரம்-கடையம்
நாட்டிமுத்துப்பதக்கமது பூட்டியபூச்சாமும் ௱௮

நலமை-தருபூதிசிறுமீசைப் பொட்டும்-வள்ளி
தய்யலேமாலையிட வொய்யாரமெட்டும் ௱௯

சாமி-திருவிளை யாடலைநினைத்தார்-முருகர்
திடத்துடனேவள்ளியுற்ற யிடத்திலேகுதித்தார் ௱௰

செக-பதிவேலர்வள்ளிமுகங் கண்டார்-ஆரும்
பகவானைவள்ளிகண்டு முகம்நாணிக்கொண்டாள் ௱௰௧

தேன்-மதுமிருந்தயிருள்வனத்தி லொத்தை-தினை
வனத்திலேநீயிருப்பதையும் நினைத்துப்பார்சற்றே ௱௰௨

அடி-கோதையரை உனக்குத் துணை யில்லையா-சிங்கங்
குரும்புசெய்யும்புலியானைக் கிரும்பாநீயுமலையா ௱௰௩

பெண்-மாதைமடமயிலே நீயாரு-யின
வழியுங்குலம்பெயருரு மொழியாமல்கூறு ௱௰௪

எனக்கும்-தாகத்துக்குந் தண்ணீர் தருவாயே-நீயுஞ்
சமைந்திருந்துவாகிமண முடிந்ததுஞ்சொல்வாயே ௱௰௫

மணி-வாருமுடிவேலர்சொல்ல மாது-சொல்வாள்
வாட்டமுள்ளசேதியேநீ கேட்டாயிப்போது ௱௰௬

புனக்கும்-பாத்திரத்தில் கயிறுகட்டித்தாங்கி-நானும்
பாத்திலிருந்தேவிடுவேன் காத்தாலதைவாங்கி ௱௰௭

க்கு-எத்தசிலந்தாரே விளைப்பாரும்-யினி
விளக்கமானவார்த்தைகளை வளக்காமல்போரும் ௱௰௮
லும்-மெத்தவும்வார்த்தைகளும் பேசேன்-நீயும்
வெறுவாமல்சிலங்கேட்டால தரவுமனங்கூசேன் ௱௰௯
ட-பித்தமருளுனக்கதியமாச்சோ-நானும்
பேசினதைப்பளிப்பாக எசினுயிப்போதே ௱௨௰
ங்கை-புலிவயருபசித்தாலும் புலலு-புலி
பொசிக்குமேபுல்லதற்கும் ருசிக்குமோசொல்லு ௱௨௰௧
ள்ள-கவியாமல்தந்தாலும் பாலு-உன்னை
நம்பிகுலந்தெரியாம லுண்பேனோகேளு ௱௨௰௨
வர்கள்-சாதிகுலந்தெரியாமல் தண்ணீர்-ஆரும்
தந்தாலும்உண்பாரோ விந்தையுள்ளகன்னி ௱௨௰௩
ந்து-எதுநீயுமிழிகுலமோ சாதி-தண்ணீ
ரில்லைஎன்றாகிலும்நீ சொல்வாயொருசேதி ௱௨௰௪
ரயம்-மறையோதும் வழிகளறியாயோ-நீயும்
வஞ்சகமில்லாமலறங் கொஞ்சமுஞ்செய்யாயோ ௱௨௰௫
ற்ற-பெரியோரை அடுக்காததினாலே-நீயும்
பேசுகிறாய்சிறியோர்கள் வாசனையினாலே ௱௨௰௬
விக்கும்-தாகத்துக்குத் தண்ணீர்கொடுக்காமல்-யினத்
தாரவர்களுக்கேஉப காரஞ்செய்யாமல் ௱௨௰௭
ாலும்-தேகமதைப் பேணியிருந்தென்ன-பல
தேசமெல்லாமாண்டபணத் தாசையிருந்தென்ன ௱௨௰௮
உன்றன்-கோத்திரமும் பெயரையுமிப்போது-சொன்னால்
குறைவுகளுமேன்மையுள்ள வரவுகள்போகாது ௱௨௰௯
என்குலம்-சாற்றுவேன் என்பெயர் கந்தன்-குறச்
சாதிகான்திருத்தணிகை நீதியுள்ளவேந்தன் ௱௩௰
சம்-உண்மைசொல்லி சிலத்தையும்நீதானே-தந்தால்
உண்ணுவேனுன்னைஎன்ன பண்ணுவேன்கானே ௱௩௰௧
டிக்கும்-தண்ணீர்கொடுத்தால்வரும் நன்மை-யென்று
தாராளமாய்வள்ளி கூறுவாளுண்மை ௱௩௰௨
மலையில்-வள்ளிக்குளியிலே பிறந்தேன்-குமரன்
வனசரசனென்னைஎடுத்துக் கனமாவளர்த்தேன் ௱௩௰௩
பெயர்-வின்றுவேனுன்வள்ளிமணந் தேரு-மணு
மில்லேருதிவானன்குடி சொல்லுவேன்கிற்றாரு ௱௩௰௪

அடி.-இருபேருமொரு சாதி-நானும்
இனிவாகச்சொல்லுகிறேன் கனிவாக்கேள்சேதி ௩௩௫

படிக்கும்-சுருதிமொழிபரிதியனே பற்ற-தேகம்
துடிக்குதடிசலதாக மெடுக்குதடிமெத்த ௩௩௬

கல்லு-தரையிலடிசூடுபொறுக்காமல்-ஆ-ஆ
சரிஎணையாகானுமுன்றன் அருகேயிருக்காமல் ௩௩௭

கான-குறவியிலே எணியேஎடுப்பாய்-நானும்
கோரிவந்தபடியேதண் ணீரையுங்கொடுப்பாய் ௩௩௮

அடா-இருக்கவிடங்கேட்டவனும் படுக்க-கேட்ட
ஏசல்கதைபோலே பேசாதேவாய்கடுக்க ௩௩௯

நீயும்-கிருக்கலோ தண்ணீர்கிடையாது-மெள்ள
கேலிபோலேபேசிஎன்ன கோவிணுயிப்போது ௩௪௰

கேலி-சாடைபரியாசமுதவாது-நானும்
தரிக்கும்பரண்மீதிலேநீ யிருக்கவுந்தகாது ௩௪௧

நீயும்-ஓடவேணும்வெளியே தெரியாமல்-கோப
முள்ளகுறாதிவீரர் மன்னாரியாமல் ௩௪௨

அடி.-மறவர்குலம்வந்தமணிக் கண்ணே-என்னை
மதிக்காமல்பறணியிலே குதிக்கிறாய்பெண்ணே ௩௪௩

வள்ளி-கருணைமதிகளொன்குலமே நானும்-கெட்டி
காரியாநீயிருந்தாலும் பாரியாகவேணும் ௩௪௪

சிலிப்பி-துள்ளுமாடு பொதியதுசுமக்கும்-கோப
முள்ளவரிடத்திலேல முள்ளதுசுறக்கும் ௩௪௫

நீயும்-தள்ளாதேவந்தோர் விருந்தே-என்னை
தடுக்கிறாயுலகிலென்ன எடுக்கிறாயிருந்தே ௩௪௬

வண்ணம்-இலஞ்சியம்நீ பருவமடிபெண்ணே-பசி
எடுக்கும்வேளையிலன்னங்கொடுக்கவேணும் சொன்னேன் ௩௪௭

உனக்கு-வலியேநான் வந்தால்மலியாதே-அம்மான்
மகளேநீஎனக்குநாயகமே சலியாதே. ௩௪௮

மனு-நீதிமுறைவேலர்சொல்லும் வார்த்தை-பச்சை
நீலவள்ளிகேட்டுரைப்பாள் வேலர்முகம் பார்த்தே ௩௪௯

ஞாயம்-ஏதுமறியாமலேயுசத்தி-எனக்கு
இணையாகச்சொல்தகுமோ துணிவாக்கேள்நத்தி ௩௫௰

காட்டுப்புலியிடத்தில்நரியூஞ்சல் போட்டா-நரி
பிழைக்குமோபுலியிடத்தில் மீளுமோகேட்டாய் ௩௫௧

சொற்ப-எலியோடிப் பூனையேவெல்லாது-என்னை
ஏச்சாகநீபேசுகிறாயுன் வீச்சுகள்செல்லாது ௱௫௨
கொடிய-சிங்கமதைக்கேவலை கட்டாதே-கொம்புத்
தேனெடுக்கமுடவனுக்குத் தானதுமெட்டாதே ௱௫௩
உயர்ந்த-தங்கமனைதப் பங்கமஞ்சொல்லாதே-நீவா
தாளாதேயினிடம்விட்டுப் போடாநில்லாதே ௱௫௪
சுடும்-தீப்யோடேநீயும்விளையாட்டா-கொலை
செய்யும்புலியோடேநீ அய்யோபோராட்டா ௱௫௫
மினுக்கும்-தய்யலர்கள் பொய்யில்லைநெஞ்சு-என்னை
தயவாகநினையாதே பயமாநீஅஞ்சு ௱௫௬
அடா-என்ன துணிவானதுஉன் நெஞ்சு-போடா
யிரவலேஎங்களுட் குறவர்க்குநீபஞ்சு ௱௫௭
நீயும்-சொன்னபிழை பொறுத்தேனினி யஞ்சு-அடா
சோரமுள்ளபெண்களாரையும்போய்க்கொஞ்சு ௱௫௮
பொல்லாத-நண்ணமாரேழுபேருமுண்டு-தந்தை
ராசனுஞ்சேனைபிரகாசமதாயுண்டு ௱௫௯
வேடர்-கண்ணாலே உன்னையவர்கண்டா-தேகம்
கப்பியஉயிர்தலையுந் தப்புவதுமுண்டா ௱௬௰
போபோ-சும்மாநீ பாவஞ்சுமக்காதே-யிது
துன்பமதுவினை வம்புவளக்காதே ௱௬௧
பாவம்-யிம்மொழியுங் காதிலேகான்கேட்க-காட்டி
லிருக்கும்வேடுவனெனையும் உருக்கமாய்ப்பார்க்க ௱௬௨
வள்ளி-காரிகையாள்சொன்னமொழி கேட்டு-சாமி
கந்தனுஞ்சொல்லுகிறார் விந்தையுள்ளபாட்டு ௱௬௩
போடி-ஆரையடியிம்மொழி யுரைத்தாய்-ஒருத்தி
ஆனையவுங்குத்தியேசொல்லாலதை மறைத்தாள் ௱௬௪
காம-சுகமரியாப்பேதையரை நில்லு-அருந்
சூடாதமாலையது வாடாதோசொல்லு ௱௬௫
குருடர்-பகையானசிறையிலே யிருந்து-பெண்கள்
பளிக்கவும்பருவகாலம் களிக்கவும்பொருந்து ௱௬௬
கொடுக்கும்-அறமரியாப் பொருளதுவிசாரம்-நீயும்
அருஞ்சிறையில்மணமன்றி யிருந்தென்னசாரம் ௱௬௭
என்னைவிட-மறவரிலே பேதகுலம்ரெண்டா-அழகு
மதிவிடுசனவனிமை நிதியிலேவேணுண்டா ௱௬௮

என்னை-யிழிவாகப்பேசுகுறாய் சூத்ர-மனை
மேற்கஎன்னைகண்ணாலே பார்க்கவேதோணுதா ௱௬௯
செய்த-பழியகனுமென்னையும்நீ தொட்டா-செல்வம்
படையழகுகுணமும்நிதி கிடையாதெனைவிட்டா ௱௭௰
உன்தன்-அருமையுள்ள தவத்தாலேவந்தேன்-அதை
யறியாமல்பேசினதா லுருகிமனம்நொந்தேன் ௱௭௧
மணப்-பெருமையுடன் வந்தேனடிநானே-வள்ளி
பேட்டிஎன்னோடே கூடிவெசந்தேனே ௱௭௨
தேடி-என்னைவணங்காதவரு மில்லை-வீட்டில்
ஏழைகளுக்கன்னமெந்த வேளையும்பொய்யில்லை ௱௭௩
வள்ளி-அன்னமேஉனக்குத் துதி பாடி-யஞ்ச
லாட்டுவார்தாதியர்சீ ராட்டுவார்கோடி ௱௭௪
அள்ளி-யிறைக்கத்தண்ணீ ருசிக்குந்தெரியாதா-நீயும்
என்னசொன்னாலும்பூமி உன்னையிகழாதா ௱௭௫
கடும்-தரையிலேஎன்காலுகடுக் காதா-நானும்
தஞ்சமென்றுங்கெஞ்சியுந்தன் னெஞ்சுமிரங்காதா ௱௭௬
நீயும்-நூலாகிப்புத்தியறியாயா-வேத
நூனெறியோதுமொழி மானுமறியாயா ௱௭௭
யாரும்-உவமையில்லபெண்களிருந் தென்ன-நல்ல
வழியுந்துணையில்லாதபெண் ணழகாயிருந்தென்ன ௱௭௮
வர்ண-பட்டுகளும்பணிதிகளும் சூட்டி-அன்னம்
பால்பழமுந்தேனுஞ்சு காவமுதூட்டி ௱௭௯
பேசும்-கொட்டோசைகருவிகள்முழங்கும்-உன்னை
கோடிமனுதேடிகவி பாடியேவணங்கும் ௱௮௰
தேடும்-அற்புதமேஅன்னமேநூ தனமே-நானும்
அத்தைமகனென்கணவன் நித்தம்நீவங்கணமே ௱௮௧
உன்னை-எப்போதுமென்னருகில் வைப்பேன்-எனக்கு
ஏவாதகுற்றமுஞ்செய் தாலுமேபொருப்பேன் ௱௮௨
என்-அருகிருந்துகொண்டிருப்பாய் நீயும்-உனக்
கப்போதுதேவர்களால் புஷ்பமழைபெய்யும் ௱௮௩
யிப்ப-தருவேநீகேட்டவை மெல்லாம்-நானும்
சாதகமாக்கேட்டதெல்லாம் வேதமொழிச்சொல்லாம் ௱௮௪
வள்ளி-பூலோகாமணம் பெற்ற-அது
போலேநீகூடாமற் கேளேநீமெத்த ௱௮௫

எழிமே-தாவாகஎந்தனையுமேசி-நல்ல
தரந்தெரியாப்பெண்ணாகயிருந்தொருவாசி ௱௮௬

பெரிய-அண்டமதைஅருகாலே அழைப்பேன்-ஏழு
ஆழியையுங்கடுகாக ஒருநாழிகையிலமைப்பேன் ௱௮௭

பூமி-மண்டலமெல்லாமுனு நிற்பேன்-அடி
மன்னுயிரும்உன்னுயிரும் வைப்பேனுதரிப்பேன் ௱௮௮

துன்பம்-சாக்காடுமூப்புஎனக் கில்லை-வேறே
தத்துகள்கோயென் னிடத்திலையுமில்லை ௱௮௯

வழி-சேர்க்கையுள்ளகாற்காதம் நானே-கண்ணு
சிமிட்டியேவிழிக்குமுன தட்டிவருவேனே ௱௯௰

வள்ளி-பெண்ணேநீபேசுகிறாய் உன்னி-நீயும்
பெருக்கமுள்ளபரண்மீதி லிருக்கிறோமென்றெண்ணி ௱௯௧

உந்தன்-அண்ணமார்பெருமைகளைச் சொல்லி-என்னை
அருட்டியேதலைஉருட்டி மிரட்டுகிறாய்கள்ளி ௱௯௨

நானும்-யின்னேரமொன்னோடே தர்க்கம்-வெய்யி
லெரிக்கிதுதண்ணீரு தவிக்கிதொருபக்கம் ௱௯௩

அடி-என்னையினிஉன்னோடே சேர்ந்து-வள்ளி
யிளைப்பாறுந்தண்ணீர்கொடுத்து களைப்பதுவேமாற்று ௱௯௪

சாமி-முத்தையன்சொல்லிவரும் நீதி-சிரந்த
முல்லைமலர்சூடும்வள்ளி சொல்லுவாள்சேதி ௱௯௫

நீயும்-எத்தனைசொன்னாலும்நட காதே-என்றால்
எங்கியேதலைமுகமும் வீங்கிச்சாகாதே ௱௯௬

அய்யோ-அனியாயமானயின் னாளோ-சொந்த
அம்மான்மகளானாலுஞ் சும்மாவருவாளோ ௱௯௭

பழுத்த-கனியிருக்கக் காயையுந்தின் பாளோ-திருட்டுக்
கள்ளனேசொன்னதெல்லாம் உள்ளதோநீயாரோ ௱௯௮

அடா-பேசாதும்பேசுகிறாயெத்தி-அதிக
பெருக்கமுள்ளதேவைக்கு சுருக்கமுள்ளபுத்தி ௱௯௯

மனம்-கூசாமலாகாசவீச்சு-ஒப்புக்
கொள்வேனோசொன்னதெல்லாங் கள்ளமுள்ளபேச்சு ௨௱

ஆகா-அனியாயமாகவேயிவ் வேசம்-போட்டு
அடுத்தவனேகபெண்களையுங் கெடுத்தாயோமோசம் ௨௱௧

கேளு-யினிவேடர்வரும்நேர மாச்சு-நீயும்
யிருந்தாலவர்வாய்க்குநல்ல விருந்தாகவேபோச்சு ௨௱௨

கையே-கொட்டிகெக்கலிகள்போட் டாலும்-என்னை
கும்புட்டுநீகெஞ்சி அன்பாக்கேட்டாலும் உ௱௩
உனக்கு-எட்டாதபொருளையு மெண்ணாதே-நோன்பு
யிருக்துமேனக்குதவம் வருக்தியேபண்ணாதே உ௱௪
என்ன-தாவந்தமாகவேகேட் டாலும்-நீதீ
தருணமென்றுசொல்லிகுட்டிக் கரணம்போட்டாலும் உ௱௫
மன-ஆவலிலேபருப்புகள்வே காது-நன்று
அடியாதபொலிஎருது படியாதிப்போது உ௱௬
சுத்த-பேயாநீசொல்வதெல்லாம் பின்னம்-தேடி
பிச்சைக்கிவந்தவன்பெண் ணிச்சைகொண்டுமென்ன உ௱௭
நீயும்-வாயாலேவேதமறை யோதி-நல்ல
மார்க்கமுள்ளபெண்ணையுங்கண் பார்க்கலாமோநீதி உ௱௮
என்னை-பந்திகள்சேரிக்கநீவந் தாயோ-அடா
பாவிஎனைச்சிறைஎடுக்க மேவியேவந்தாயோ உ௱௯
வாயால்-எத்தனைசொன்னாலுமசி யாது-கொஞ்சம்
யீரமில்ல மனவிலே தண்ணீரும்கசியாது உ௱௰
உயிர்-ஆக்கவும்நீயழிக்கவும்திர மூண்டு-பூமி
அந்தமுள்ளகடல்மலையே பந்தாகக்கொண்டு உ௰௧
பாது-காக்கவுமுண்டுஅதி காரம்-என்று
கழறுமொழிபொய்யதுவே உழறுமொழிச்சாரம் உ௰௨
கொட்டி-சும்மாவாகிடக்குதுநீ யள்ள-நீயும்
தொக்காகதினைப்புனத்தில் தக்கமணுங்கொள்ள உ௱௩
சிறந்த-யிம்மண்டலத்திலே புகட்சி-நன்று
யிருப்பதையும்விட்டுநீ விரிப்பதுமிகட்சி உ௰௪
காணே-கோவேந்தனென்றுமு[illegible]ரைத் தாயே-வீசுங்
கொச்சைருறத்தியின்[illegible] விச்சையும்வைத்தாயே உ௰௫
நீரும்-பூவேந்தோனுமடு[illegible]காது-அற்ப
புல்லனென்றுலோக[illegible]ம் உன்சொல்லைஎடுக்காது உ௰௬
பெண்கள்-காமமுள்ளமோகமதை நாடி-தேக
கட்டுகளும்கிதிமனையுங் கெட்டவர்கள்கோடி. உ௰௭
நிலவு-சோமனைப்போலழகுயிருந் தாலும்-யின்னம்
சுத்தமுள்ளசெல்வமெல்லா மெத்தயிருந்தாலும் உ௰௮
பெற்ற-[illegible]ர்தகப்பனையுங் கண்டு-பேசி
தாகமுள்ளமணமுடிப்பார் லோகமதிலுண்டு உ௰௯

நீரும்-மாயமாவந்தவள்ளிப் பெண்ணை-நேரை
வம்பாகக்கேட்டாலோ நம்புவாளோஉன்னை ௨௨௰
பேசும்-அன்னேரம்வள்ளிமுகம் நோக்கி-எங்கள்
ஆறுமுகவேலவருங் கூறுவார்தாக்கி ௨௨௧
வள்ளி-கண்ணேநான்சொன்னதொரு வாக்கும்-கெட்ட
கலகமுள்ளவார்த்தையில்லை உலகமதுக்கேற்கும் ௨௨௨
எந்தன்-கண்டமதையிரண்டாச் செய்தாலும்-தீயில்
காச்சினெனக்குளக்கம்பு பாச்சியேவைதாலும் ௨௨௩
உந்தன்-செண்டுதனையிரண்டும்பிடி யாமல்-வள்ளித்
தேனேஉன்னிதழமுர்தம் நானேகுடியாமல் ௨௨௪
விட்டு-போவேனேசும்மாவளங் காடு-காமம்
பொருக்குதில்லைநீவந்து உருக்கமாக்கூடு ௨௨௫
கொடும்-பாவிநோனுமடி ஒற்றே-யினிப்
பழம்நழுவிப்பால்தனிலே விழுகுதுபார்சற்றே ௨௨௬
அடி-பழிகாரிநெஞ்சுயிரங் காயா-உன்னைப்
பழக்கநான்வைத்தின்ன மழுக்கமுள்ளகாயா ௨௨௭
ஒரு-வழியாநான்சொன்னபடி வாடி-நல்ல
மாப்பிள்ளைதானென்னை விடவுமகப்படாதுதேடி ௨௨௮
கையால்-தாவியேபரண்மீதி லேறி-தனமுந்
தாறுதகுதிரையிலே ஏறுவேன்சவாரி ௨௨௯
தேகம்-ஆவியுள்ளமோகமதுந் தீர்ப்பேன்-அதுவும்
அழகல்லவென்றுமனமிழகவேநான்கேட்பேன் ௨௩௰
உனக்கு-கட்டுவேனதாலியும்பின் னாலே-நானுங்
கருதியதனமிதழுந் தருவாய்முன்னாலே ௨௩௧
வள்ளி-மடந்தையரைகேலிகள்பண் ணாதே-யிதிலே
மனப்பிசகுவருமென சொப்பனத்திலுமெண்ணாதே ௨௩௨
நல்லா-யிருபேரும்வாதாடும் வேளை-அப்ப
யினிப்பானகதைவருது குணிப்பாகக்கேளே ௨௩௩
மெத்த-அருமையுளதேனமுது தேடி-வேடர்
ஆக்கமுடன்வள்ளிதனை பார்க்கமனம்நாடி ௨௩௪
ஒலி-சிறந்துவரும்வேடர்களைக் கண்டார்-முருகன்
திறமாகிபெருவேங்கை மரமாகிநின்றார் ௨௩௫
விளங்கும்-அரந்திகழும்வேலர்விளை யாட-வேடர்
அலங்கிர்தமாப்பரையடித்தார் விலங்குபயந்தோட ௨௩௬

அதிய-சிரானவேடர்களும் வந்தார்-புனஞ்
 சென்றுமேவள்ளிதனைக் கண்டுமேமகிழ்ந்தார் உ௩௭
யினிப்பு-கூரானஉணவுகளு மீந்து-வேடர்
 கோப்பாகவள்ளியிடங் கேட்பார்நயந்து உ௩௮
அம்மா-பைங்கிளியேஉன்றன்முகம் வாடி-இரண்டு
 பார்வைகளுந்தேகமெல்லாம் வேர்வைகளுமோடி உ௩௯
உனக்கு-சங்கடமாயிங்கேது மல்லு-அதிய
 தாட்டாகமிருகம்பட்சி ஓட்டினதோசொல்லு உ௪௰
தாயே-எங்களால்குறைவுகளே தூண்டோ-நீயும்
 எடுத்துச்சொன்னசேதியிலே தடுத்ததுநீகண்டோ உ௪௧
வள்ளி-தக்கமேஉந்தன்மனங் கோணும்-அதைத்
 தாங்கவில்லாமற்சொல்லு நாங்கள்தரவேணும் உ௪௨
வேடர்-கெஞ்சியேமுத்தமது கொண்டார்-மகளே
 கேட்கவேடர்முகந்திரும்பிப் பார்க்கமரங்கண்டார் உ௪௩
மனம்-அஞ்சியானந்தமது கொண்டு-வேடர்
 ஆங்காரமாயோடி வேங்கையடிநின்று உ௪௪
புனத்தில்-யிந்தமரம்வந்தவகை யேது-நீங்கள்
 எந்தவிதஞ்சொன்னாலும் வந்தமாஞ்சூது உ௪௫
நல்ல-விந்தையிதுநேற்றுமுதல் இல்லை-யினி
 வேறென்னயோசனைதான் தூரோடேகெல்லு உ௪௬
மற்ற-வேடர்களுஞ்சொன்னதொரு சேதி-தந்தை
 வேந்தனுமேகேட்டுரைப்பான் சாந்தமுள்ளநீதி உ௪௭
அடா-போடாதெரியாமலே நவின்றீர்-அழகு
 பொருந்தமலரிலைகனியுஞ் சொரிந்தநிழல்கண்டீர் உ௪௮
காமன்-யிருந்தாலும்வள்ளிசொல்லுங் கேட்டு-மரம்
 யின்னவிதமென்றறிந்து சொன்னபடிமூட்டு உ௪௯
மனம்-பொருந்தியேவள்ளியிடஞ் சென்றார்-மலர்
 பொலிவேங்கைவந்தவழி ஒழியாதேஎன்றார் உ௫௰
வேங்கை-மரம்வந்தவழி தெரி யாது-என்று
 வள்ளியுரைக்கரசன் சொல்லுவானப்போது உ௫௧
மரம்-தருமலரும்நிழலது கொடுக்கும்-உன்னைத்
 தந்ததெய்வமரமாகி வந்ததாயிருக்கும் உ௫௨
மரத்[illegible]ருலேயிருந்துவிளை யாடு-அதிலே
 துள்ளிவிழும்பூக்களைநீ யள்ளிமுடிசூடு உ௫௩

நீயும்-பாருயினிநன்மைகள் மென்மேலும்-வரும்
பதாரதகாரியமுஞ் சிதராதொருக்காலும் ௨௫௪
வள்ளி-குஞ்சியேஉனக்குநிழல் வேண்டி-கந்தன்
குழந்தமரமாகியே வளர்ந்திருப்பாண்டி ௨௫௫
மனம்-அஞ்சாமல்மாநிழலில் செல்லு-தாயே
அங்கேயொருகுற்றம்வந்தா லெங்களிடஞ்சொல்லு ௨௫௬
விளையுங்-கதிருகளுமுற்றியதும் வாரோம்-தினைக்
கண்டுமுதல்செய்துமுனைக் கொண்டுமனைபோறோம் ௨௫௭
வேளை-எதிரிநமக்கில்லையடி மானே-என்று
எழுந்துவிடைவாங்கிமனை புகுந்தார்வேடர்தானே ௨௫௮
பார்க்க-புதுமையிதுநடந்தவைந்தா நாளு-மிந்தப்
புவிமுருகன்நடத்தியதை செவிகொடுத்துக்கேளு ௨௫௯
வீர-கதுமையுள்ளவேடர்கிதம் போலே-அன்னம்
கறியமுதுகொண்டுவருங் குறவர்க்குமுன்னாலே ௨௬௰
தலைப்பு-ஆதிமுதலந்தமுங்கடந்த-வேலர்
அங்குமுதலிங்குவரை எங்குமேநிறைந்த ௨௬௧
நடக்கும்-நீதிஅனியாயமு மறிந்த-பூமி
நீங்காதஉயிராகுப் படிபாங்காவளர்ந்த ௨௬௨
மகா-தேவர்விளையாடல்நினை வாக-அதைச்
தேசமனுவேலர்புகழ் பேசும்படியாக ௨௬௩
முருகர்-அவளுடன்சன்னுசி யாக-நம்மை
ஆளும்வடிவேலர்கதை கேளுநினைவாக ௨௬௪
கிழ-விருத்தமுடன்சிவந்ததிரு மேனி-சாமி
மெத்தவுங்கூனலில்லை சற்றேயுடல்கூனி ௨௬௫
அங்கம்-பெருத்தமுள்ளசடைமுடியுங் கட்டும்-திருநீறு
பூசியநெற்றியிலே வாசமுள்ளபொட்டும் ௨௬௬
வேலர்-கைதனிலேசிவமாலை பூசை-உத்திக்
கமலம்வரைதாடிவிழக் குமரர்முகமீசை ௨௬௭
தேக-மெய்தனிலேதிருநீற்றுப் பூச்சும்-கை
வீச்சுகளுஞ்சிவநாமப் பேச்சுபெருமூச்சும் ௨௬௮
வளையும்-தண்டுகுடைவிசிரிகரங் காட்டி-மணித்
தண்டலையுஞ்செவியிலிரு குண்டலமுமாட்டி ௨௬௯
சாமி-கண்டமதிலுருத்திராட்ச மாட-மிரு
கைதனிலேதிருபூதிப் பையுஞ்சலாட ௨௭௰

முருகர்-மார்புதனில்முப்பிரியா னூலும்-கையில்
வைத்ததிருவோடுஞ்செக மெய்த்தபுலித்தோலும் ௨௭௧
வேலர்-கார்திகழுமிதியடியு மாட்டி-யிரு
கக்கத்திற்புல்தகழுக் தக்கபடிபிடுக்கி ௨௭௨
குடிக்கும்-கஞ்சாக்குடுக்கையொரு கக்கம்-சாமி
கையெடுக்குஞ்சோழியப் பையுமொருபக்கம் ௨௭௩
மடி-கொஞ்சுமொட்டுச் சல்லடமுமாட்டி-யிடையில்
குஞ்சமுள்ளசரமணியிற் பஞ்சவர்ணம்பூட்டி ௨௭௪
இரண்டு-புசமதிலேகாசரயக் தொங்க-வேடர்
போரவழிதன்னிலே ஒய்யாரமாயிலங்க ௨௭௫
கடை-விசையாகவேடர்களும் வந்தார்-சிவ
வேடமதுகொண்டவரை நாடியேமகிழ்ந்தார் ௨௭௬
கண்டு-அதிவிரசாவேடனு மெழுந்தான்-முருக
ரடிதனிலேவேடரசன் முடிபடவிழுந்தான் ௨௭௭
சாமி-புதுமையிதாநீங்களுமெங் தாரு-ஆழப்
போர்திமலைவனந்தனிலே வந்ததும்எவ்வாறு ௨௭௮
வனத்தில்-ஆளரவக்கட்டவுங்கூடாது-கண்டால்
அழுங்குகரிசிங்கம்புலி எலும்பையும்போடாது ௨௭௯
சாமி-கேளும்வேறு பாதைகளுமில்லை-நல்ல
கிருதமுதளதுவேனுக் தருவந்தடையில்லை ௨௮௰
எங்கள்-குலதெய்வமதுபோலே வந்தீர்-யினி
குறைவில்லைஎங்களுக்குந் தரிசனமுந்தந்தீர் ௨௮௧
வேலனும்-சலமுதவும்பெயர்நாம மென்ன-மனம்
நாடியதும்வனந்தனிலே தேடியதுமென்ன ௨௮௨
உங்கள்-அங்கமதுதழற்சியுள்ள நேரம்-நீரும்
அந்தரமாவந்தது சிறந்தவலங்காரம் ௨௮௩
சாமி-எங்களால்கூடியதை விள்ளும்-நாங்கள்
யிப்போதேதருவோமதை யற்புதமாக்கொள்ளும் ௨௮௪
நடந்து-போகவழியிலே [illegible]கிடை யாதே-என்று
புகலவேமுருகரு[illegible]மபகருவாரப்போதே ௨௮௫
உங்கள்-தேகமதுசுக[illegible]தானு வேந்தே-நயம்
சிக்குமலைவனந்தனிலே கக்குசமாவந்தேன் ௨௮௬
தார-[illegible]துவாங்கியணி முந்தி-நல்ல
சிறப்பானவளப்பமெல்லா முறைப்பேனுன்[illegible]சித்தி ௨௮௭

ஒன்றும்-தெரியாமல்நானும்வா யில்லை-எனக்குத்
திருத்தணிகைகுடியிருப்ப பொருத்தமுள்ளஎல்லை ௨௮௮
முத்தி-தவத்தைவிட எனக்கென்னவேறு-நானும்
தப்பிதமுஞ்சொல்லவில்லை சிப்பனென்தன்பேரு ௨௮௯
சேத்திரம்-புவனமதுசுற்றிவருங் காலே-அன்
போடுநதிதீர்த்தங்க ளாடுவதேவேலை ௨௯௰
கோயில்-தலமதிலேயிலமதா யிருப்போம்-மனம்
தச்சுமேதவசமலை யுச்சியிலிருப்போம் ௨௯௧
நினைத்த-பலனுதவுங்காசிநகர் சென்றோம்-அரன்
பாதமதுதரவேவிசுவ நாதரையுங்கண்டோம் ௨௯௨
காசி-கங்கையிலேதீர்த்தமது வாடி-யிப்ப
கன்னியாகுமரியாட வுன்னிதமாயோடி ௨௯௩
நானும்-யிங்குவந்தேன் பாதைதெரியாமல்-எனக்கு
எண்ணமேகுமரியிலே ஒன்றும்புரியாமல் ௨௯௪
பெற்ற-மக்களிலும்மற்றப்பொரு ளாசையிலும்-மனம்
வையாமல்யிரவுபகல் செய்வஞ்சிவபூஜை ௨௯௫
வரும்-துக்கசுகமிரண்டுமெனக் கேது-வாயே
திறந்துசொல்லுனக்கேதுவும் தருவோமிப்போதே ௨௯௬
ஆரும்-மனக்குறைவில்லாமல்சிறு தன்மை-எனக்கு
மகிழ்ந்துநிதஞ்செய்வார்க் குகந்துசெய்வோம்நன்மை ௨௯௭
நீங்கள்-எனக்கொன்றுந்தரவேண்டாம் போங்க-யிப்ப
என்வருத்தந்தீர்ப்பதற்கு மனமிருந்தால்வாங்க ௨௯௮
நீயும்-பதறாதேசொல்லுகிறேன்-மன்னு-நானும்
பாதையிலேபட்டுவந்த வாதைகளைச்சொன்னால் ௨௯௯
அலரி-பதறாதாகாதுமலை புல்லு-எந்தன்
களைப்புகளுமேமூச்சு இளைப்புகளைவெல்லு ௩௱
சாமி-காடுதனிலிருக்கயிட மில்லை-பொல்லாக்
கடுவாய்நரிபுலிசிங்கங் கொடுமையதுதொல்லை ௩௱௧
அய்யா-ஓடிநாமமாள்போகிற வழிநேரே-மன
முருக்கமுள்ளவள்ளிபா ளிருக்கிறதும்பாரே ௩௱௨
தவசி-உமக்கேற்றதாவனமிருக்க-வள்ளி
உகந்திவுபசாரஞ்செய்ய மகிழ்ந்துநீர்படுக்க ௩௱௩
கையால்-அமுக்கிவள்ளி காலுனைபிடிப்பாள்-சாமி
ஆருமதிப்பானதம்பூருகள் படிப்பாள் ௩௱௪

உங்கள்-மனம்போலேயிருக்க களையாரி-சாமி
வாரும்வந்தகாரியத்தைப் பாரும்மனந்தேறி ௩௱௫
நேர்மை-கனம்பொருந்தும் வள்ளியாள்தனக்கும்-சாமி
கடியமணஞ்சல்தியிலே முடியுமோஅவளுக்கும் ௩௱௬
வேடர்-சொல்லவேவேலர்மனந் தாங்க-நீங்கள்
சொன்னதுமாகாதவழி மன்னவரேபோங்க ௩௱௭
அய்யோ-நல்லதில்லைநீங்கள்சொன்ன வார்த்தை-சன்
னுசிகாண்வேதாக்தியோசித்தே இதுகடைசிபார்த்தேன் ௩௱௫
மோசம்-பெண்ணுசைப்பேயதையும் விட்டு-நானும்
பேரின்பமானவழி கோறிவந்திட்டு ௩௱௯
இரண்டு-கண்ணாலேபெண்களையும் பாரோம்-அது
கந்தருக்குமேற்காது வந்தவழிபோறோம் ௩௱௰
உன்றன்-மகள்வள்ளிகலியாணங் கொஞ்சம்-நாளே
வருததுக்குள்ளாக வெருவுகிறாய்பஞ்சம் ௩௰௧
புகழும்-தகைமையுள நாரியிருக்கும்-யிடம்
சன்னுசிபோனாலும் வின்னமோஉனக்கும் ௩௰௨
எனக்கும்-உபசாரம்வள்ளியுஞ்செய் வாளோ-மனம்
ஒப்பாமலெனக்குவேறே தப்பிதஞ்செய்வாளோ ௩௰௩
வள்ளி-முப்பழமும்ஒப்பிதரு வாளோ-நானும்
முன்னுல்வரச்சொன்னுலவள் பின்னுற்போவாளோ ௩௰௪
யினி-எதப்பாகாலும்வர மாட்டேன்-பெண்க
ளிழக்கமவரோடேகை கலக்கவேமாட்டேன் ௩௰௫
சாமி-மூதேவிபோலேயவள் நில்லாள்-வள்ளி
முதல்சாதிஉமக்குபதிற் சேதிசொல்வாள் ௩௰௬
அப்ப-வேடர்களுமுருகர்மனந் தேற்றி-அழைக்க
வேலவருஞ்சொல்லுகிறார் சாலமுள்ளநேத்தி ௩௰௭
தேகம்-சாடிவந்துபாருங்கடா தம்பி-நானும்
தடம்பிறண்டுவந்ததிலே யுடம்பெல்லாம்வெம்பி ௩௰௮
இரண்டு-கக்கமுள்ளமூட்டைகளை வாங்கு-எந்தன்
கையதுவேசிலர்கள்வந்து பையவேதாங்கு ௩௰௯
என்-பக்கமநில்விசிரிகளை வீசு-வாசப்
பன்னீருங்கமண்டலத்துத் தண்ணீரைப்பூசு ௩௨௰
எ[illegible]கும்-வெய்யிலையுமாற்றுங்குடை ஏற்று-நீங்கள்
மெள்ளவென்னைக்கூட்டிப்போய்கள் முன்னுகளைப்பார்த்து ()

முரு-அய்யாவே ஆறுதலை சாற்றி-வேடர்
அழைத்துவந்து வள்ளியற்ற பரத்திலேயுமேற்றி க௨௨

வேடர்-அள்ளிவள்ளிக் கமுகு கரும்பூட்டி-முரு
கய்யாவேவள்ளிக்குங் சப்டாரலேகாட்டி க௨௩

வள்ளி-தெள்ளமுர்தேதேனே மட மானே-யிந்த
சிருள்ள பெரியோரைப் பாருநீதானே க௨௪

நாலு-மலஞ்சலமுமற்றபெரி யோரு-நல்ல
வணிகவளப்புள்ள திருத் தணிகையிலருரு க௨௫

பூமி-தலத்திலுள்ள தீர்த்தமெல்லா மாடி-காசித்
தலத்திலேயுமேகங்கா சலத்திலேயுமாடி க௨௬

தெற்கே-கன்னியாகுமரியிவர் தேடி-முள்ளுக்
காட்டிலேயும்வழிதெரியா மேட்டில்முகம்வாடி க௨௭

முத்தர்-சென்னிவரைகளைப்புகள்மே லாடி-களை
தெளியாமற்சுப்பிரமணியர் வழியிலேதிண்டாடி க௨௮

நீயும்-செய்ததவமானதுவை கூடி-வந்த
சிலையானபாதமதைத் தலையாலேசூடி க௨௯

கூடும்-மெய்யானவேலைகளைப் பார்த்து-அவர்
வேணுமென்றுகேட்டதெல்லாங் கோணமல்தீர்த்து க௩௰

எதிர்த்து-மாரானசேதிகள்சொல் லாதே-அவர்
வழக்கானசாபமது தாக்கும்பொல்லாதே க௩க

அவரு-கூறுமொழிதவறுமல கேட்டு-களை
கொண்டதொருயிளைப்புகளை அண்டாமலோட்டு க௩௨

மனத்-துணிவானகாரியஞ்செய் யாதே-அவர்
தாஷ்ணமாச்சொன்னாலுமேசினீ வையாதே க௩௩

செய்யும்-பணிவிடைதான் பெரியோர்க்குவேணும்-நாங்கள்
பன்னியாசொல்லவேணுந் தன்னாலேதோணும் க௩௪

வருந்தி-கூட்டியமுதூட்டியேதா ராட்டு-வள்ளிக்
கோதையவரோடேபண் ணாதேபோராட்டு க௩௫

பேரை-கேட்டுவரம்வாங்கியா சாரு-அவர்
கிசரியாச்சொன்னாலுமே சரியாகேளு க௩௬

தாயே-மெத்தவாநாங்கள் சொல்ல வேணும்-உனக்கு
மென்மேலும்யோசனைகள் தன்மனதிற்பூணும் க௩௭

ஒரு-குற்றம்வராமலே யனுப்பு-மனக்
கொள்ளாமற்கோபம்வந்தால் மெள்ளவேதிருப்பு க௩௮

எங்கள்-ஆத்தாளேசிற்றூரு போறோம்-நாங்க
ளவ்விடம்போய்நாளைத்தின மிவ்விடம்வாறோம் ௩௩௯

வள்ளி-பார்த்தவளுஞ்சம்மதமெ ன்றாள்-சிவ
பத்தியுள்ளவேடர்களுஞ் சிற்றூருசென்றார் ௩௪௰

போது-ஆதவனுமாழியில் ஆழ்ந்தான்-மறுநா
ளாதவனுங்கீட்டிசையிற் சோதியுடன்வந்தான் ௩௪௧

நல்ல-நீதியுள்ளவேடரு மெழுந்தார்-வந்து
நித்தம்போலமுநீந்து சிற்றூர்புகுந்தார் ௩௪௨

புகழும்-காரணமாநின்றதிரு வேலுமு-சிவ
கந்தரும்நடத்திவரும் விந்தையதைக்கேளு ௩௪௩

நிரை-பூரணமாவேலர்மனங் துள்ளி-அமுது
புசிக்கவேஎன்வயறு பசிக்குதடிவள்ளி. ௩௪௪

யிவ்விடம்-வம்பானவழிதெரியாப் பாதை-சுக
மாகவுபசாரஞ்செய்தும் போகவில்லைவாதை ௩௪௫

வள்ளி-அன்பாகஅனம்தந்தா லுண்பேன்-அது
அல்லாமல்வேரமுது மெல்லாமுந்தின்பேன் ௩௪௬

சற்றும்-அசராமலேவ்ளவையு முண்பேன்-அமுது
அகப்படாதிருக்தாலும் யுகமளவும்வெம்பேன் ௩௪௭

பண-பகைமையுள்ளோர் தாரதையுமிகள்வோம்-ஏழை
பணவிடைகளீந்தாலதைக் குணமுடனேமகிழ்வோம் ௩௪௮

எந்தன்-அடிவயறுஅனலாகப் பற்றி-அடி
அன்னமேபசிக்குதடி உன்னுடையசத்தி ௩௪௯

ஒரு-பிடியமுதயீந்தாலும் போதும்-அடி
புண்ணியமும்உனக்குண்டு கன்னியேஎப்போதும் ௩௫௰

ஆதி-பரமகுருசொன்னதொரு வார்த்தையையேகேட்டுப்
பகருவாள்வள்ளிசண்முக மதையுமேபார்த்தே ௩௫௧

பத்தி-விரதமதுகொண்டபெரி யோரே-மனம்
வெம்பாமலென்மொழியே அன்பாக்கேட்பீரே ௩௫௨

மெத்த-ஏழைமுகம்பார்ப்பதுவே தர்மம்-விரத
மெடுப்பார்க்குஅமுதுசலங் கொடுக்காதன்மம் ௩௫௩

அவர்-கிழனநீகரகம் போவார்-யினனங்
கிரக்திபலநோயாலே யிருந்துமவர்சாவார் ௩௫௪

[illegible] அய்யாவுக்குக்கனி தேனும்-வெல்லம்
அருமிளனிதினைமாவுந் தருகிறேன்நானும் ௩௫௫

ள்ளி-பய்யவேசாமிதனைக் கேட்டு-குயில்
பாட்டுசொல்லிமாவேதிரு வோட்டிலேபோட்டு ௫௰௬
ணிகள்-சக்கரையுந்தேனையுந் தொட்டாள்-வள்ளி
தாவியிளநீர்பாலை மாவதிலேவிட்டாள் ௫௰௭
மனம்-அக்கரையாப்பிசைந்ததை யெடுத்தாள்-வள்ளி
ஆயாரும்வேலருட வாயிலேகொடுத்தாள் ௫௰௮
மகா-முக்கியமாமாவையும் வேலருண்டார்-கந்தன்
முருகருமன்னேரந் திருகாமனமுங்கொண்டார் ௫௰௯
வருத்தம்-சுக்கிசமாக்கண்டமதில் விக்கி-கமலக்
கண்ணிரண்டுமுருகருக்கு விண்ணேறிச்சொக்கி ௬௰
முருகர்-கையிரண்டுமொருபுரமாக் கய்கிஞ்சி-தொண்டை
கதரியேகால்யிரண்டும் உதரிக்கொண்டுவெட்டும் ௬௰௧
சாமி-மெய்யெல்லாம்வேர்வைகளாக் கொட்டும்-முருகர்
மேமூச்சாவாங்கியதை கீழ்மூச்சாவிட்டும் ௬௰௨
வாசிச்-சுழிமுனைசுருட்டியே யிழுக்கும்-முடி
சோர்ந்துமேபிடரியுமண் ணோந்துமேயுக்கெக்கும் ௬௰௩
ஞான-வழிபுகலும்நாக்குவெளி நீட்ட-மேகக
வர்ணமதுகொண்டுகைக் காணமதுகாட்ட ௬௰௪
யிருக்கும்-ஆங்குவள்ளிகாணவெகு சோரம்-சோம
ணலையதாவடமுடியுங் குலையுமேயன்னேரம் ௬௰௫
வள்ளி-தாங்கியேவேலனை யெடுப்பாள்-முருகர்
சடலமதைவள்ளியுந் தடவியேகொடுப்பாள் ௬௰௬
வள்ளி-குந்தியிருந்தே துடி துடிப்பாள்-கையைக்
கொட்டியேஎழுந்துதேகங் கட்டியேபிடிப்பாள் ௬[illegible]
எலும்புக்-கந்தியுளநரம்புகள் பிடிப்பாள்-வள்ளி
கண்டலையுமுருகருட தொண்டையேமுடிப்பாள் ௬௰௮
பொங்கி-நீரொழுகும்வேர்வைகள் துடைப்பாள்-கையை
நெறித்துதுகில்தரித்துவுப சரித்துமலக்கரிப்பாள் ௬௰௯
திகழும்-கீர்த்தியுள்ளமூர்த்தியிவ ராச்சே-விருத்தக்
கிழவிவரச்சுவரிடியும் பழமொழிபோலாச்சே ௭௰
நாளும்-தந்தையருக்கிந்தமொழி போச்சு-பிப்ப
தடமிகுந்தபெரியோர்க்கு மிடரும்வரலாச்சே ௭௰௧
பொருப்பு-கந்தனைவந்தவரைக் காரு-யிளங்
காலைகுமரேசனீயேமைமுகம்பாரு ௭௰௨

வணங்கும்-சிலகுலதெய்வமதும் போச்சு-என்னை
    தேசமுள்ளவரைக்குமிதைப் பேசும்படியாச்சு ௱௭௩
அய்யா-வேலவனே எனைசும்பூமி-யிந்த
    வேளையிலேஎனைவந்து ஆளவேணுஞ்சாமி ௱௭௪
மோசம்-ஓகோகோயிதுவென்ன வாது-நாம
    ளுபகாரஞ்செய்துமென்ன அபகாரத்தீது ௱௭௫
நோன்பு-வாகான பெரியோரைக் கண்டால்-நல்ல
    மங்களங்கள் கூடும்வேறே சங்கடங்களுண்டா ௱௭௬
அரசன்-தந்தையண்ணன்மார்களவர் பொல்லார்-நாமள்
    தனிமையாயிருந்தாலு மென்னவிதஞ்சொல்லார் ௱௭௭
முருகர்-விந்தையதைஎண்ணிமுகங் கன்ன-யினி
    வந்ததெல்லாம்வரட்டும்நம் மவர்நொந்திருலென்ன ௱௭௮
நன்மை-வாரதும்வலியேவந்து கூடும்-வர
    மாட்டாதேவருந்திநாம் கேட்டாலுமோடும் ௱௭௯
யிந்த-பார்தனிலேதெரிந்துமனஸ் தாபம்-நாம
    பண்ணினதுமில்லையிது கண்கண்டபாவம் ௱௮௰
வருந்தி-கன்னிமனங்குன்னிவள்ளி சோர்ந்தாள்-அப்ப
    காசாயம்பூண்டவரு மாயாசந்தீர்ந்தார் ௱௮௧
முருகர்-துன்னியகண்மின்னியே திறந்தார்-விளங்குஞ்
    சுப்பராயர்வள்ளியிடஞ் செப்பவாய்திறந்தார் ௱௮௨
உயிர்-கொலைசெய்யும்வேடுவர்கள் கண்டு-நீங்கள்
    கோரியதுமென்னவெங்கே போரீர்களென்று ௱௮௩
எங்கள்-தலையாலேநாங்களும் நடப்போம்-சாமி
    தாகமதுஎன்னபசி போகவேபடைப்போம் ௱௮௪
நாங்கள்-முடியாதகாரியமு மில்லை-சாமி
    முருகனுடன்சொன்னதையுக் தருவோர்தடையில்லை ௱௮௫
வேடர்-பிடிவாதமாகஅவர் சொல்ல-நானும்
    புண்ணியமானவழி யெண்ணியதுவல்ல ௱௮௬
எனக்கு-மேலிளைப்புத்தீர்த்துவிட வேணும்-நானும்
    விரும்பியகதியாடித் திரும்பிவரவேணும் ௱௮௭
எந்தன்-கால்கைகளிரண்டையும் பிடித்து-பரண்
    காட்டியேஎன்பெருமை நீட்டியேபடித்து ௱௮௮
வேடர்-கொண்டுவந்தமாயந்தெரி யாது-நஞ்சை
    குளைப்பியமுதீந்தாயோ பிழைப்பதினியேது ௱௮௯

மாயம்-கண்டுநான்கழிந்திருந்தும் பெண்ணை-உந்தன்
கையாலுயிர்போகவேதான் செய்தானேவென்னை ௧௯௰

பிறக்கும்-பலத்தையுங்காலிலுந்தமனம் வாடி-வெகு
பாட்ரனதவங்கள்செய்தேன் கோடானகோடி ௧௯௧

சிவ-தவத்தால்விதியே வெல்லலாகும்-என்று
சாற்றுமறைமொழியேயிப்பப் பார்த்தார்பொய்யாகும் ௧௯௨

எழுதும்-விதியேவெல்லமுடியாது என்று-சிலர்
மெச்சவேமனுப்பேசும் நிச்சயந்தான்நன்று ௧௯௩

புத்தி-மதியாலேசெய்தவினை கூடி-உந்தன்
மருந்தவுந்தேகமெல்லாம் பரந்துமேலாடி ௧௯௪

பிறகு-முத்திவழிதேடியேநான் வந்தேன்-இப்ப
முக்கியமாயுன்னிடத்திற் சிக்கிமனங்கொந்தேன் ௧௯௫

குமரி-நதியாடவந்தபல ஞச்சு-நானும்
நானுமற்செய்ததவங் காணமல்போச்சு ௧௯௬

ஏழை-அகதிபரதேசியுடன் சண்டை-ஆறும்
அடைக்கலமாவந்தவரை யுடைக்கலாமாமண்டை ௧௯௭

அன்பு-விகிதமில்லாவுனக்கெதிரி நானே-நானும்
வீம்பானகாரியங்கள் தீம்பாச்செய்தேனே ௧௯௮

முத்தி-ஆதரவுசொல்லியமு தீந்தா-யிப்ப
அனியாயமாயெனக்குச் சனியனுப்புகுந்தாய் ௧௯௯

நாடி-வாதபித்தம்சிலேற்பனமும் ஒன்று-கூடி
வாங்கிறதும்மூச்சடங்கித் தாங்குகிறதும்நன்று ௨௱

வந்து-விக்குதடிதொண்டையிலே மாவும்-கண்ணு
மிரழுவேசுரங்கண்டு வாழுதடிநாவும் ௨௱௧

மாயம்-சொக்குதடிகக்குதடி ஆவி-வயற்றை
சுருட்டுதடிகுடலெல்லாம் பிறட்டுதடிபாவி ௨௱௨

ரம்பே-யிசிக்குதடிபசிக்கிதொரு பக்கம்-கைகால்
பிழுத்துவடலெங்குமனல் கொளுத்துதொருபக்கம் ௨௱௩

வாயே-கசக்குதடிபுளிக்குதடி சுற்றி-விசிக்
காருதடிவள்ளிதடி மாறுதடிபுத்தி ௨௱௪

எனக்கும்-தலையாட்டங்கொள்ளுதடி ஏது-நீயுந்
தயவாகயிருந்தும்வினை நெய்தபெண்ணகுறை ௨௱௫

கட்டும்-வலையிலகப்பட்டதொரு மானும்-நின்று
மயங்குவதுபோலேயிப்பத் தியங்கிறேனோநானும் ௨௱௬

வள்ளி-சன்ஞாசியோடுபுரியும்நீ வாதம்-என்னை
தடைகளுமேசெய்தாய விடைகள்தெரியாதா ௪௱௭
பொல்லா-அனியாயஞ்செய்தவளே போடி-எனக்கு
அறிவுதடுமாறுதடி முறிவுகளைத்தாடி ௪௱௮
யிப்ப-பழிக்கிறதும்உன்னைநான் சும்மா-அய்யோ
பாவம்வரும்உனைச்சொன்னா லாவதில்லைநம்மால் ௪௱௯
மனத்-தெளிவுடனேஎனைக்கேளு பாங்கு-நம்மால்
தெரியாமற்சொல்கிறது ஒருவரைப்பொல்லாங்கு ௪௱௰
அன்றும்-கயல்விழியேவருந்துன்பஞ் சொல்ல-இது
கர்த்தனையுமறியாமல் வந்ததுவுமல்ல ௪௰௧
மனுக்கள்-செய்துவரும்நன்மைதின்மை யிரண்டு-பல
தேவருக்கும்வருந்துன்ப மியாவருக்குமுண்டு ௪௰௨
முன்னை-வழியிலேவந்தொரு தொல்லை-யிப்ப
உன்னையும்நான்பொல்லாப்பு சொல்லமுறையில்லை ௪௰௩
ஆண்டி-ஏழையடிநானுனக்கே தஞ்சம்-தேக
மிளைத்ததினாலமுதன்னக் களைத்ததுவோகொஞ்சம் ௪௰௪
வள்ளி-ஆதரவுஉன்னைவிட வேறே-இல்லை
அடுத்திருந்தஎன்னோடே படுத்திருந்துபாரே ௪௰௫
நாளும்-சேதிசொல்லக்காதினுமை யாதோ-உந்தன்
தேட்டமுள்ளமடியிலென்னைப் போட்டாலாகாதோ ௪௰௬
கூவும்-கனக்குயிலேகிடைக்கவேணு மிரணம்-கருவி
கரணமெல்லாமடங்குதிப்ப மரணமுள்ளதரணம் ௪௰௭
இனி-புனக்கிளியேமனமுமிறங் காதா-நானும்
பிழைக்கிறதுமரிதிப்பக் களைக்கிறதுஞ்சூதா ௪௰௮
எந்தன்-முன்னாலேவந்துஉட் காரு-தலை
முடியேகரந்தாங்கிஎந்தன் மடியிலேவந்தே ௪௰௯
வள்ளிக்-கன்னமதிரண்டையுங் கடிப்பார்-வேலர்
கடினமானபிணிபோலே மடியிலேபடுப்பார் ௪௨௰
மலைக்-கதிரேசன்செய்தவினை யாட்டு-பிணி
கனத்ததுபோலேவள்ளி தனத்திலேகைபோட்டு ௪௨௧
வேலர்-அதிவிரசாவள்ளியை யடிப்பார்-முடி
அடிமயிரும்வள்ளிசேலை மடியவும்பிடிப்பார் ௪௨௨
வெள்ள-இறங்கிவந்தஇசைகேடு துள்ளி-அனலா
எரிக்குதடிதண்ணீருந் தவிக்குதடிவள்ளி ௪௨௩

ம்மா-கிறக்கும்வடிவேலரிது சொல்ல-சொல்வான்
கிசரியும்வார்த்தைகளாப் பேசினீர்நல்லா ௪௨௪
ல்லா-வம்பானவார்த்தையது கேடு-யிந்த
வையமனல்திப்பியையும் பொய்யதியச்சூடு ௪௨௫
வள்-அம்மான்பெரியோருஞ் சூது-நல
மறியாமல்சொல்லும்வய றெரியிதுயிப்போது ௪௨௬
னும்-தேனுந்தினைமாவுங்கனி தந்தால்-உடலில்
செல்லுமென்றும்நஞ்சதுவுங் கொல்லுமென்றுநொக்தால் ()
ய்யா-வானுலகமண்ணுலக முள்ள-பரிதி
வரைக்குமெமனைமனுப்பேசி யிரைக்கரதோமெள்ள ௪௨௮
ப்ப-குடிக்கவேசான் தருவேனிளநீரு-என்ன
கோலமேரஎன்னுடைய காலமோசொன்னீர் ௪௨௯
றும்-படிக்கலாமேளனும்புமில்லா நாக்கு-கெட்ட
பாவமனியாயமுள்ள கேவலமுண்டாக்கு. ௪௩௰
ண்ணும்-அன்னமதில்பின்னமதைச் சேர்த்து-குற்ற
மாக்கவில்லைசோதனைதான் பார்க்கிரீர்கூத்து ௪௩௧
ாமி-சின்னவர்கள்பேசுகிற பேச்சு-பரம்
சிவபத்திரோன்புகலுக் தவறினதாப்போச்சு ௪௩௨
ள்ளி-சுத்தமுடன்பேசுகிறாய் நம்பேன்-யினிச்
சொல்லாதேசொன்னியானல் பொல்லாதவம்பேன் ௪௩௩
க்தன்-சித்தமனுகலங்காத கள்ளி-பாலுஞ்
செவ்விளனீர்தந்தாலும் ஒவ்வாதுவள்ளி ௪௩௪
அடி-சக்கரையாப்பேசியாவ தென்ன-முன்னே
சாற்றுமொழிதவரமகாத்தவன்தான் மன்னன் ௪௩௫
ஆறு-அக்கரையில்சேர்க்கிறதாப் பேச்சு-மாரி
ஆற்றிலேயுங்கையேவிட்டுப் பார்த்ததுபோலாச்சு ௪௩௬
ாவி-போருகடிஎன்னுயிரு தள்ளு-வள்ளி
பொய்யில்லைப்பாவமதை நீயேற்றுக்கொள்ளு ௪௩௭
கண்ணீர்-வேகமுள்ளகனைவருமே ஏழு-மலை
வெற்புகடக்தேசென்று லொப்புவேனெசேரு ௪௩௮
விடம்-வந்தாரண்கண்டதுண்டோ முந்தி-நன்று
வழுத்துகின்றாய்மறுபடியு மிழுத்துவிட்டாய்சத்தி ௪௩௯
வள்ளி-சந்தோஷமாகஎனைக் கூட்டு-கண்ட
தீண்ணீரைமருள்நீங்க உன்னிதமாபூட்டு ௪௪௰

வார்த்தை-சம்மதமானால்நீ சொல்லு-நானும்
சன்னாசிபாவமில்லை முன்னாலே சொல்லு ௪௪௧
இதுவும்-சும்மாவெனச்சோதிக்கிறீ ரய்யா-நல்ல
சோக்கானவழியேவிட்டுக் கேட்க்கிறதுமெய்யா ௪௪௨
தேனும்-மாவுங்கனிநஞ்சாகத் தோணும்-சம்ம
மனைத்தண்ணீர்தாரோமென்றால் சுனைத்தண்ணீர்வேணும்.
சாமி-சேவிக்கிறேன்கையைமுன்னே தாரும்-யிது
செகசண்டிகதைபோலாச்சு நகர்ந்துமெள்ளவாரும் ௪௪௪
போருக்-கட்டியேகரடியோடை மல்லும்-மனக்
களிப்புதருஞ்சுனைக்குப்போகிற வழியிதுவேசெல்லும் ௪௪௫
தேகம்-ஒட்டியேவேலவையுங் கூட்டி-வள்ளி
உண்ணீருமானசுனைத் தண்ணீரைக்காட்டி ௪௪௬
தண்ணீர்-தாகமதுதீர்த்துவரச் சொல்ல-வேலர்
தடுத்துமேபதிற்சேதி எடுத்துமேசொல்ல ௪௪௭
வள்ளி-ஏகமாவருகுது தண்ணீரு-என்னை
யிழுக்காதோபாசமது வழுக்காதோபாரு ௪௪௮
கையால்-விலக்கமுடியாதகடும் புல்லு-தண்ணீர்
வெள்ளமுமுள்ளுகளும் பள்ளமுங்கல்லு ௪௪௯
வாது-கலக்கமெல்லாம்ஒருமுழுக்காப் போக-தண்ணீர்
காட்டுகிறதுபோலிதிலே மாட்டுகிறாய்சாக ௪௫௰
வள்ளி-பண்ணாதேகேலியினி வாநீ-மயிர்
பழுத்துமேதேகமெல்லாம் வெளுத்துமேகூனி ௪௫௧
எத்தன்-கண்களும்பஞ்சுக ளடைந்து-வள்ளி
கந்தாமுங்காவளரி விந்துகளுடைந்து ௪௫௨
யிப்ப-இருக்கிறதுங்கண்ணாக் கண்டாய்-நானும்
ஏழையென்றுங்காணமுள்ள வேளையில்நவின்றாய் ௪௫௩
உனக்கு-உருக்கமுள்ளமனமிருந்தா லோடி-ஆற்றி
னுண்டானநீரெடுத்துக் கொண்டுவந்துதாடி ௪௫௪
வள்ளி-பண்டமொருபாவமொரு பக்கம்-கல்லுப்
பாறையிலேபோகிறதண்ணீர் தருவதற்குந்தர்க்கம் ௪௫௫
நானும்-கொண்டுவரத்தண்ணீர்க்குப் போகிறேன்-கோபக்
குணத்தைவிடும்தண்ணீர்வள்ளி கூனைத்திலேவாரேனான் ()
கையித்-பற்றித்திருவோட்டையுமெடுத்தாள்-சுனையில்
பாயும்நீர்வள்ளிவேலர் வாயிலேகொடுத்தாள் ௪௫௭

ணம்-சத்திவேலர்தன்னை ரருந்தி-கனி
கனிமுள்ளதேகமெல்லாம் ஒளிவாய்ப்பொருந்தி ௪௫௮
வள்ளி-தையலேசொல்வேனொப்புக் கொள்ளு-தண்ணீர்
தாகமதுதீர்த்தாய்வேறே பாகமதைதள்ளு ௪௫௯
இப்ப-செய்யவேணுமுபகாரம் யாரு-எந்தன்
தேகமதற்கேற்றபெண் மோகமதைத்தீரு ௪௬௰
ஆரும்-வேண்டியபல்லாதுவுங் கோணும்-நடுவில்
வெம்பாமல்தர்மம்நிதஞ் சம்பாதிக்கவேணும் ௪௬௧
இறக்கும்-ஆண்டிஎன் அமதிக்காதே என்னை-வள்ளி
அருமையுள்ளவரமெதுவுந் தருவேனென்சொன்னேன் ௪௬௨
எந்தன்-நேரேநீமறுமொழி யொன்றுகூறுதே-கையை
நெறித்துமேஎன்னையும்நீ வெறித்துப்பாராதே ௪௬௩
வள்ளி-நாரியரேயோசனைபண் ணுதே-வழியே
நடந்துவருஞ்சிதேவியே தடர்ந்துதையாதே ௪௬௪
கையாற்-தீண்டாதகனி அசலம் நாளும்-வள்ளி
தினகாதகனியும்நல்லா உண்காதசோறும் ௪௬௫
குயவன்-பாண்டமதிலிட்டவிளக் காகும்-தண்ணீர்
பாச்சாதபயிரும்நன்றுக் காய்க்காலுஞ்சாகும் ௪௬௬
தேகம்-இட்டமுருபாருத தங்கம்-அய்ய
யிட்டுண்ணுதபொருள் கட்டவரும்பங்கம் ௪௬௭
சொல்லை-தட்டாதேதருணமிது வேளை-பாலைத்
தட்டியும்நீகொட்டாதே கிட்டாதுகானை ௪௬௮
மனை-யில்லறமுந்துறவறமுஞ் சிறிது-அடியாரிட்ட
ஏவல்பணிவிடைகள் தட்டாதேபெரிது ௪௬௯
எந்தன்-சொல்லுமொழிதவறாது வாக்கும்-சாபங்
தடருமடி துன்பமுள்ள யிடருகளுண்டாக்கும் ௪௭௰
பழனி-கந்தனையுங்கண்ணாரக் கண்டால்-வள்ளிக்
கானக்குறவருக்கு மீனங்களுமுண்டா ௪௭௧
நாளும்-வந்தேநீசெய்ததவத் தாலே-அந்த
வழக்கமறியாமலென்னை யிழுக்கமதுபோலே ௪௭௨
வள்ளி-நாணுகிறாய்கோணுகிறாய் போது-மிந்த
நஞ்சையதுவுண்கவும்நீ யஞ்சுகிறாயவ ௪௭௩
நீயும்-ஆணவமாச்சிறையிலே யிருந்து-கசி
காணமரியாதபா சாணநீமருந்து ௪௭௪

வேலர்-சாற்றுமொழிவள்ளியுமே கேட்டாள்-வேலர்
தப்பானசொல்லைமலைக் கப்பாலேபோட்டாள் ௪௭௫
சாமி-ஆற்றுதகிழவனு யிருந்தீர்-யிப்ப
ஆனையுமெருத்துமிராக்ஷசப் பூனையைப்போல்வந்தீர் ௪௭௬
நீரும்-என்பாவம்பறிக்கவும்யிவ் வேசம்-சாமி
எடுத்தீரேயிப்போது கெடுத்தீரேமோசம் ௪௭௭
கெட்ட-வம்பானபுலியுடனே நேசம்-பண்ண
வாதுமனங்கொள்ளும்நினைக்காது விசுவாசம் ௪௭௮
யிருப்பார்-சிவனையுமேசுத்திசுத்தி மோனம்-நீரும்
தேசமதிலேபெண்கள் பாசமுள்ளஞானம் ௪௭௯
நீரும்-தவமதிலேசிறந்தசிவ யோகி-பெண்ணைத்
தாண்டிப்போனசாகரத்தை வேண்டிநினைவாகி ௪௮௰
இப்ப-எந்தவிதங்கேட்பீர்முன் னாலே-சாமி
யீஸ்பரனார்மந்திரமே பேசும்நாவாலே ௪௮௧
புத்தி-மந்தமுள்ளசிறியோர்க்கு முத்தி-நல்ல
வழிகாட்டும்பெரியோர்கள் பழிகூட்டும்புத்தி ௪௮௨
வரும்-முன்னாலேதிரிகாலர் தோன்றும்-ஊசி
முனையிலொருகாலூன்றிச் சிவநினைவாநின்றும் ௪௮௩
ஞானம்-தன்னையறிந்தும் தவம்வழுவலேது-லோக
சங்கடமும்பெண்ணாசை உங்களிடமேது ௪௮௪
துறவு-வேதாந்தம்நூல்முறைகள் கற்று-நகையும்
வெகுளிகளுமாங்காரஞ் சகமாசையற்று ௪௮௫
பல-பேதகமுமலஞ்சல மகற்றி-அச்சம்
பேச்சுகளுங்கைக்கரண மூச்சுகள்நிகழ்த்தி ௪௮௬
உண்ணும்-அறுசுவையு மைம்புலனைவென்று-யின்ன
மஞ்சாவபாதகமும் வஞ்சகமுங்கொன்று ௪௮௭
மூன்று-திரியாசைபொறியஞ்சும் [illegible]ட்டு-பயிரைச்
சேதமதுசெய்யுமஞ்சு பூதம[illegible]தச்சுட்டு ௪௮௮
பெய்யும்-பனிவெயிலுங்காற்று [illegible]மழையிலும்-தூக்கம்
பகைநீக்கிச்சுகதுக்க[illegible]மனுக்கிமேலும் ௪௮௯
காட்டு-கனிமூலங்காயிலை[illegible] தின்று-பல
கருவிவழிசெல்[illegible] லொருமித்துநின்று ௪௯௰
நாசி-சுழிமுனையில்மந்திரத்தை நட்டு-மனஞ்
சொக்கிசரம்பார்வைதவும் கிறக்கிறதைவிட்டு ௪௯௧

19

மேனி-குளித்துவந் தூரறுகின்ற சேற்றைப்-பூசிக்
கொண்டதுபோலேயாவுமைக் கண்டேனேநேரே. ௪௯௨

எந்தன்-அளப்பரியக்கேட்டலுவா மெய்யா-சாமி
ஆச்சரியமிதிலேவரு மாச்சிரியமெய்யா ௪௯௩

அதியம்-இளக்கமுள்ளகுறச்சாதி நானே-சொல்லு
மேற்காதுதினைக்கொல்லை காக்கவேபோறேனே ௪௯௪

சேரை-சொலன்மேயவளவிபுயக் கோட-பாயுஞ்
சுனைத்தண்ணீர்வேலவரும் தினைத்தார்விளையாட ௪௯௫

ஊழி-அல்லல்வினை யகற்றிவைக்குந்தந்தி-முக
மாண்டவனைஐங்கரனை வேண்டவேனுமுந்தி ௪௯௬

அண்ணு-விநாயகனேஉபகாரஞ் செய்யும்-வள்ளி
விடைநீக்கிப்போகிறவளைத் தடையாக்கிவையும் ௪௯௭

சொன்ன-அன்னேரம்யானைமதங் கொண்டு-கலக
மள்ளியேசொறியுமதைத் வள்ளிஅவள்கண்டு ௪௯௮

வள்ளி-ஓடியேவேலவரை யிணங்கி-தேக
மொட்டியேவள்ளியுங் கும்பிட்டுமேவணங்கி ௪௯௯

சாமி-நாடிவழிபோகிறபோ தென்னை-ஒரு
நல்லானைவந்ததையுஞ் சொல்லுவேன்முன்னை ௫௱

போகிற-பாதைவழிகட்டிகுரல் போட்டும்-பசி
பரந்துமேளனைவிழுங்கத் திரந்துபல்லைக்காட்டும் ௫௱௧

ஆனை-காதாட்டிக் கையாலழைக்கும்-மலைக்
கல்லுமுள்ளுமரங்களையும் வில்லாவலைக்கும் ௫௱௨

நாலு-காலாலேகல்லுகளை வெட்டும்-அந்தக்
கல்லையுமேவாரிவழி யில்லாமல்கட்டும் ௫௱௩

ஆனை-கோலமுள்ளகாலோங்கிக் காட்டும்-நீண்ட
கொம்பானமரங்களையும் பம்பரமாஆட்டும் ௫௱௪

நின்று-திருநடனஞ்செய்துவேழ மோடும்-இரண்டு
சேவடியேதூக்கிவேலர் காவடிபோலாடும் ௫௱௫

நீண்ட-கருமலையேகையா லடிக்கும்-மணிக்
கல்லுகளைவிசிறது பல்லையுங்கடிக்கும் ௫௱௬

என்னை-கொன்றாலும்தின்றாலும் மணமுடித்தாலும்
குறப்பெண்ணைப்பூமியிலே பிறப்பிக்கா தழுவை ௫௱௭

நேரே-நின்றாடும்வேழமதை விட்டு-உம்மை
நேயமுள்ளதெய்வமென்றும் ஞாயம்பிடிபட்டு ௫௱௮

நீரும்-வேடனுமாய்வேங்கைமர மாகி-பின்பு
வேதியருமானையுமாய் நீதிமுறையாகி ௫௱௯
வந்து-நாடியதும்நானுவீதம் நீரே-அதுவும்
நன்றாகத்தோணுதிப்ப வென்றனைக்கார்ப்பீரே ௫௧௰
என்னை-பூவோடேநாரதுபோற் சேர்ந்தும்-மனுப்
பொம்மையுற்றகண்ணுக்கு நிலைபோலக்காத்தும் ௫௧௧
உமக்கு-தேவையுள்ளகாமனையும் வெல்லும்-பின்னம்
சிலுகையுள்ளவம்புகளை யிழுகாமல்சொல்லும் ௫௧௨
வள்ளி-என்னடிநீகொண்டுவந்தாய் கூத்து-நானு
மிளமைகளில்லாதகூனக் கிழவனென்றுபார்த்து ௫௧௩
நீயும்-இனைகாற்கப்போறேனென்று சொல்லி-அதியச்
சேட்டைசெய்யுமானையேநீ கூட்டிவந்தகள்ளி ௫௧௪
மூந்தி-தெரியாமலுன்னிடத்திற் வந்தேன்-நானும்
செக்கிலகப்பட்டஎள்ளுக்கு சமமாகநொந்தேன் ௫௧௫
வள்ளி-சிரியாமற்கேளடிநா னொத்தை-பெருமூச்
செடுக்குதுவிடவிடென்று நடுக்குதுதேகத்தை ௫௧௬
வந்த-ஆங்காரவானையே விரட்டு-பெரும்
ஆற்றையும்பெண்களுட வார்த்தையுந்தூரட்டு ௫௧௭
வள்ளி-தாங்காதுஎன்னுயி ரிப்போது-ஓடும்
தண்ணீருமீந்தநற்கா பண்ணுகிறாய்வாது ௫௧௮
வள்ளி-கரடியோடேநானுமல்லுக் கட்டி-புதையல்
கண்டேனேகாணவில்லை மண்டலமாவெட்டி ௫௧௯
ஞான-துறவிநான்சொல்லுகள் கட் டேனே-வள்ளி
சுந்தரியேஉன்வலையில் வந்தகப்பட்டேனே ௫௨௰
பாவி-கொலைசெய்யும் தந்திபிடமென்னை-தள்ளிக்
கொல்லாதேஉனக்கென்ன பொல்லாதேசொன்னேன் ௫௨௧
சிக்கும்-வலைபட்டமானும்விடு பட்டு-ஓடும்
வாரெனவேவந்தவழி போறேனுனைவிட்டு ௫௨௨
ஆவின்-பால்பழமுந்தேனுமள்ளிக் குடியே-என்று
பச்சமுடன்சொன்னதற்கு வைத்தாய்நீவெடியே ௫௨௩
எந்தன்-காலிரண்டுங்கட்டிப்பிடி யாதே-பிச்சைக்
கஞ்சிக்கிவந்தவனைக் கெஞ்சியடியாதே ௫௨௪
மனம்-கரூதிவரமுறுதிகளும் பெற்றாய்-தருண
காலமறிந்துதவுமிந்திர சாலமெல்லாங்கற்றாய் ௫௨௫

ஸ்ரீ-பொருதிவருமானையை விலக்கு-காணம்
போடுவேன்கந்தன்கழல் பாடுவேனுனக்கு ௫௨௬
வள்ளி-கும்பிடுவாள்தாளடி பிடிப்பாள்-வாயைக்
கொன்னியேகரங்கூப்பிக் கண்ணீர்வடிப்பாள் ௫௨௭
மனம்-வெம்புவாள்குந்தியெழுந் திருப்பாள்-வள்ளி
மெல்லியவள்காரியத்தைச் சொல்லியுபசரிப்பாள் ௫௨௮
கருணை-பூரணமாவேலர்நினைவாகி-அதியப்
பொருப்புள்ளகணபதியே யிருப்பிடத் தாக்கேகி ௫௨௯
வெற்றி-காரணமாகவே நடந்தார்-யிருவர்
கனத்திலேயிருந்த பூங்காவனத்தலேபுகுந்தார் ௫௩௰
சோதி-திருவானருரியனைநீக்கி புத்தி
செம்மையில்லாமூடரைப்போற் கம்பலேஉண்டாக்கி ௫௩௧
நன்று-யிருபேருங்கூடிக்கலந் தார்கள்-வெற்றி
என்றுபுகழின்பமதைக் கண்டுமகிழ்ந்தார்கள் ௫௩௨
புகழும்-ஆகாயக்கங்கைமழை பெய்ய-அப்ப
ஆதவனும்வந்துவெகு சோதிஒளிசெய்ய ௫௩௩
முருகர்-வாகானபனிரெண்டு கையும்-சர
வணபவனுமாறுமுகந் துணைவேலுமெய்யும் ௫௩௪
ஏறும்-மயிலுமுடிவண்ணமே எடுத்தார்-வேலர்
மாட்சிமையில்லாததிரு சாட்சியுங்கொடுத்தார் ௫௩௫
உண்மை-ஒயிலானபழமொழிக ளோதி-வள்ளி
ஒப்பாகவேவலருமே செப்புவார்சேதி ௫௩௬
வள்ளி-போயிருநீதினைக்கொல்லையில் முந்தி-சற்றே
பொருவேனீஒருசெடியில் வருவேனென்பீத்தி ௫௩௭
முருகர்-வாய்மொழியின் படியேவள்ளிமாது-ஓடி
வந்துபரணேறியே யிருந்தாளப்போது ௫௩௮
வள்ளிக்-அடுத்தகொல்லைக் காத்திருக்குந்தாதி-பரண்
அடுத்தாளேவள்ளியிடந் தொடுத்தாளேசேதி ௫௩௯
சொல்லு-சடுத்த பில்லைப்பெரியபா தேசி-அவரைத்
தான்நீயுங்கூட்டிமெள்ளப் போனீயேவைவிசி ௫௪௰
அது-என்னம்மாஒநறையிலே நீயும்-துணை
யில்லாமல்வந்ததென்ன சொல்லாதேபொய்யும் ௫௪௧
அடி-சன்றுசிபெரியவரைக் கூட்டி-தாகத்
தண்ணீருமீந்துபோகச் சொன்னேன்வழிகாட்டி ௫௪௨

தாயே-தண்ணீருமிவ்விடங்கிடை யாதோ-உன்
தன்னிடத்திலிருக்குஞ்சல மொன்றுதவாதோ ௫௪௩

அம்மா-கண்ணுவிழிரெண்டுஞ்சிவப் பேற-வர்ணம்
கலப்பானஉடுப்புசேலை தலைப்புஞ்சோரி ௫௪௪

சிப்பாச்-சீவியமுடிமயிர் குலைந்து-பனித்தி
சிக்குகளுஞ்சந்தனமு மக்குபோலவிருந்து ௫௪௫

சூடும்-பூவுகளும்வாடியது நாறி-நெற்றிப்
பொட்டுகளுமதரவலைக் கட்டுநிறமாரி ௫௪௬

இரண்டு-கொங்கையுமேனைக்குவடு வேந்து-வன்னங்
கோறைவடுவைஇவந்த வேறைவழிகுது ௫௪௭

உந்தன்-அங்கமெல்லாம்கொந்துமுகம் வேறாய்-வள்ளி
அனமேஉன்னாவதண் டதிர்ந்தகமையுங்கூறாய் ௫௪௮

கொட்டி-வார்த்துண்ணும் பாலுமுட்டம்புக்கு-அதுவும்
மற்றூர்க்குமில்லைநீ பெற்றதேனனக்கு ௫௪௯

அம்மா-ஆர்க்கும்வருமோசமது தன்னால்-நன்றா
அற்றதுவும்பொருதும்படி உற்றதுநீசொன்னால் ௫௫௦

அதுவும்-உன்மனமுஞ்சம்மதங்கொண் டாச்சா-வல்
லாட்டிவலுவந்தமது காட்டிமோசம்போச்சா ௫௫௧

இனி-என்னைவிடவேறென்ன தறகு-நான்
எத்தனையோசோழிநின் றும் பத்தாதவெறுகு ௫௫௨

நேரை-தோழிசொல்ல வந்ததொருபாட்டை-காம
சுவைமுருகரிந்தகதை செவிகொடுத்துக்கேட்டே ௫௫௩

தோழி-கேளடிநீசிவயோகி வந்தார்-நலங்
கிட்டவேயென்பேச்சேத் தட்டாதிருந்தார் ௫௫௪

அவர்-வயிறதுபசிக்கியமு தீந்தால்-யிந்த
மண்டுள்ளவ க்கிபெய ருண்டென்றுசோர்ந்தார் ௫௫௫

அன்பா-சுயமுள்ளடலகாரஞ் சேர்த்து-நானும்
அஞ்சாமலேகொடுக்க நஞ்சென்றுவேர்த்து ௫௫௬

மூர்ச்சி-சிவனுயிர்போகிறது போல்முட்டி-களை
தீர்ந்ததுபோலுடலிலுயிர் பூந்ததுபோல்க்காட்டி ௫௫௭

சொன்னார்-தாவந்தமாணயிது வேளை-தண்ணீர்
தாவென்றாய்யயோ கூவென்றார்கேளே ௫௫௮

நானும்-சுத்தசலங்கொடுத்தாலு முண்ணார்-மலைச்
சுனைநீரேவேணுமென்று எனையும்வரச்சொன்னார் ௫௫௯

சிவ-பத்தர் ஆண்டிமெள்ளவேரான் கூட்டி-சுனைப்
பாயும்நீரள்ளியவர் வாயிலேவார்த்தூட்டி ௫௬௰

கேளு-அவனேற்டேஎன்றனையுஞ் சேர-யோகி
அழைத்தாரேநானுமனங் கலைத்தாற்போல்கூற ௫௬௧

அப்ப-தவத்தோரைநீக்கியுமா னேடு-ஆனை
தடுத்துசிவயோகியோ னடுத்தாயப்பாட ௫௬௨

அவரும்-நாலுவிதம்வந்தகோ லத்தே-யிது
நம்மகுலதெய்வமென்று செம்மையாகநினைத்தே ௫௬௩

அவர்-காலிலேவிழுந்தேனெப்புக் கொள்ள-கூரக்
கள்ளியென்றும்வள்ளியென்றுஞ் சொல்லியெனைத்தள்ள ௫௬௪

சிறக்கும்-சீர்மலேதஞ்சங்கீதம் பாடி-நம்ம
சண்முகநாதருந்தான் உண்மைசொல்லிக்கூடி ௫௬௫

நானும்-சேமமுள்ள-திருக்காக்ஷி தந்தார்-ஒரு
க்ஷணத்திலேவருவதாக வனத்திலேபுகுந்தார் ௫௬௬

வள்ளி-சொல்லிவாய்மூடுமுன் பாக-வேலர்
துடுக்கானவேடரூப மெடுத்தாரன்பாக ௫௬௭

குமரன்-வில்லம்புகரமதிலே யேத்தி-பரண்
மேவியேவேலர்வள்ளி தேவியேபார்த்து ௫௬௮

மலை-காடுதனிலேயாரானை சிக்கி-அதைக்
கசக்கிவிளையாடியே மசக்கிமனஞ்சொக்கி ௫௬௯

கசக்கி-வாடிவடுபட்டுமேபெண் ணானை-ஓடி
வியந்துதினைக்கொல்லைபுகுந் துயர்ந்துனன்வந்தேனே ௫௭௰

அதிக-மேதையுள்ளயானைதா னேவேணும்-மன
மீறியதிலேறியே சவாரிசெய்யவேணும் ௫௭௧

அப்ப-தாதியவள்மறுமொழிசொல் வாளே-என்ன
காக்கவிதுயோசனையாப் பார்க்கநல்லவேளை ௫௭௨

நீரும்-ஆனைகெட்டுக் குடந்தேடிநொந்தீர்-யிப்ப
அதிதிகளைப்பிடித்தடித்துப் பகுதிவாங்கவந்தீர் ௫௭௩

வெல்லும்-சேனைபடைதினைப்புனத்தி லுண்டா-பெண்கள்
சீரானைபிடிக்கவுந்தான் வீரதிகமுண்டா ௫௭௪

வள்ளி-இருபேருஞ்சாடைகளுங் கொள்ள-கந்த
ரெனறுமேதாதிகன்றுக் கண்டவளுமெள்ள ௫௭௫

நீதி-சுருதிமொழிபாணியுங் கடந்தாள்-தாதி
சொந்தமுள்ளதினைக்கொல்லையில் வந்தவளிருந்தாள் ௫௭௬

சாமி-சுப்பராயர்வள்ளியுங் கலந்தார்-முகந்
தொட்டுமேகன்னமுத்த மிட்டுமேபகர்ந்தார் ௫௭௭
கும்பம்-செப்புமுலைவள்ளிமட மானே-நாளை
சென்றுமறுவேலையிலே நன்றுவேடர்தானே ௫௭௮
முற்றும்-நல்லதினையறுத் தமுனைக் கூட்டி-மெத்த
ளைப்புள்ளசிற்றூரில் வைப்பார்கண்ணாட்டி ௫௭௯
அதிக-வல்லிரவுவந்தாகுறல் போட்டு-எந்தன்
வாய்ச்சமத்துலெயிருக்க கீச்சலும்நீகேட்டு ௫௮௰
யிருக்கும்-மனையும்விட்டுவந்தவளைக் கூடு-நல்ல
வாசமுள்ளசெல்வமுஞ்சந் தோஷமுங்கொண்டாடு ௫௮௧
கொங்கை-தனத்துவள்ளியிடத்திலே மொழிந்தார்-அப்பத்
தாலமுள்ளசூரியரும் வேலருமறைந்தார் ௫௮௨
ரவி-ஆதவனுமறுநாளில் வந்தான்-அன்று
ஆழிதனில்மூழ்கிமறு நாள்தனிலெழுந்தான் ௫௮௩
ஒன்று-பேதமில்லாவேடர்களுங் கூடி-செல்வம்
பெருகுந்தினைக்கதிரருந்தார் முருகர்கவிபாடி ௫௮௪
வேடர்-கோனவனுங் கதிர்க்களைக்குப்பார்த்து-ஒரு
குற்றமில்லாக்கதிரையெல்லாஞ் சிற்றூருசேர்த்து ௫௮௫
மலை-கானவர்கள்சனம்பெருத்து மிஞ்சி-கந்தன்
களஞ்சியத்தைவேடரெல்லாம் வளஞ்செடுத்துக்கொஞ்சி ()
அழகு-சுயம்பொருந்துஞ் சிவிகைதனிலேத்தி-சிற்றூர்
சுத்தமுள்ளமனைதனிமேல வைத்தார்கள்வாழ்த்தி ௫௮௭
சங்கு-கயல்சூழுஞ்சிற்றூரு முன்னம்-என்ன
மாதவங்கள்செய்தநகரோதுவென்கேளின்னம் ௫௮௮
இருள்-இரவுதனில்வள்ளிமனை சென்று-கீச்ச
விட்டுவேலர்வள்ளியைக் கூப்பிட்டுமுகங்கண்டு ௫௮௯
முருகர்-அருகாலேஅணைத்ததுவுங் கண்டாள்-உறங்கி
அஞ்சர்தவர்விழித்ததுபோ லசந்தவனக்கண்டாள் ௫௯௰
மலரும்-பூங்காவனத்திலிரு பேரும்-ஒயிலாய்
போயவர்களிருக்கவள்ளித் தாய்தகப்பனும் ௫௯௧
விடிந்து-பாங்கானபொழுதுமுகங் கண்டு-மகளைப்
பார்க்கையிலேகாணாமல் ஏக்கமதுகொண்டு ௫௯௨
வேடர்-பட்டதொருபாடுகளு மெத்த-சொந்தப்
பாலரையுங்கள்வரென்று காலாலேயெத்த ௫௯௩

கச்சை-கட்டியஉடுப்புகள் அவிழ்ந்து-பெண்கள்
கண்களுமின்னிவேட்டொன்றாகவிழுந்து ௫௯௪
முன்னே-வைத்தபொருளெடுக்கத் தெரியாமல்
மானவர்கள்பேச்சுகள் நிதானந்தெரியாமல் ௫௯௫
வீரம்-கச்சைகட்டிஒச்சங்கொள்ள மாட்டோம்-மனக்
காட்டமதுகொண்டுவேடர் போட்டார்கள்கூட்டம் ௫௯௬
ஆரும்-பார்க்கயிலேயிதுமெத்த ஏச்சு-யிந்தப்
பாருள்ளவரைக்கும் பேர்சொல்லலாச்சு ௫௯௭
மனம்-வெக்கமில்லாதிளக்கமது கண்டு-நம்ம
உள்ளனதானறியாத கள்ளனெங்கேயுண்டு ௫௯௮
திருடன்-சிற்றூரில்வரவுமனங் கொண்டு-அவன்
தேவனாயிருக்கவேணும் டாவராலுண்டு ௫௯௯
அடா-பித்தமதுபேய்கொண்ட மூடா-கள்ளன்
பெரிதாபுவிதனிலேகாப்பான் பெரிதாநீபோடா ௬௱
நாமமவர்-பிறந்துஇதுவரைக்குமனும் வானேனும்-களவு
பெண்ணாலேகண்டதல்லால் முன்னாலேகாணேம் ௬௱௧
எல்லாம்-தெரிந்திருந்தும்பேசுகிறான் மன்னன்-செல்வம்
சிறந்தவிடந்தாழ்வாகி யிருந்தாவதென்ன ௬௱௨
அய்யோ-பெண்கள்படும்பாடுகளைப் பாரு-வள்ளிப்
பெண்ணாலேதலைகுனிந்து கண்ணீரோஆறு ௬௱௩
பூமி-தின்னமுள்ளவரையும்வசை யாச்சு-நமக்குச்
சேனைபடையிருந்தாலு மானமதுபோச்சு ௬௱௪
சிற்றூர்-அரசாட்சிநாமமாலே புரிந்தும்-காடு
அண்டியபுனத்தில்வள்ளி ஒண்டியாயிருந்தும் ௬௱௫
மனம்-கருதுமனைகதவுகள்நோ காமல்-நடந்த
கதவுகளும்போனதொரு வழியுந்தெரியாமல் ௬௱௬
சொற்ப-கீரைவேறுபிடுங்கவலப் பாட்டு-நன்றாய்க்
கேட்கவந்தாளென்னிடத்தில் நாக்குலேபல்போட்டு ௬௱௭
யிலி-ஆறிவந்தசோறும்பழங் கஞ்சி-நாமமவர்
அடிப்பிறகேபோயல்லவா பறிக்கவேணுமஞ்சி ௬௱௮
போடா-என்னடாசொல்லுகிறாய் நேரே-நம்மவர்
ஈயேயவலுவாப்பிடிக்கக் கையுங்காலுவேறே ௬௱௯
அவன்-சொன்னபடிகேளாதே நம்பி-வள்ளி
தோட்டதொருவேங்கைமரம் வெட்டவேணுந்தம்பி ௬௱௰

இப்ப-களவுபோனஅதிசயமே மெத்த-மலைக்
காட்டிலேஎடுக்காமல் வீட்டிலேஎடுத்த ௬௰௧

கள்வன்-மள்ளருடல்வபங்கள் பார்க்க-திருடன்
வந்தவனைநம்மவர்வெட்டிச் சந்துசந்தாப்பேர்க்க ௬௰௨

மன்னு-செப்புகிறோம்நாங்களும்பொய் சாற்றோம்-இப்பத்
திட்டமுட்டனேதிருடன்வந்த தடமதுபார்த்தோம் ௬௰௩

பார்க்க-தப்பிதமாஒருவனடி கண்டோம்-வள்ளி
தானடியும்நாலுதடம் போனதுவுங்கண்டோம் ௬௰௪

பார்த்து-சரீவழியாச்சொல்லுங்கடா பாவி-வெட்டிச்
சரிக்கிறோமவன்தலையே கொறிக்கிறோந்தாவி ௬௰௫

திருடன்-ஒருவனுமேசிறையெடுக்க வந்தால்-வள்ளி
ஒப்பியேபோனதுபோல் தப்பிதமொழிந்தாய் ௬௰௬

நம்மவர்-நேத்திரம்போல் வளர்த்ததம்பாறுமல்-வள்ளி
நித்தமுங்கலைகளுவா சித்துமுணராமல் ௬௰௭

எதிரி-ஆத்திரம்போலச்சம்மதிக்க மாட்டாள்-வள்ளி
ஆமென்றால்நமக்குத்தெரி யாமலேகமாட்டாள் ௬௰௮

நீயும்-தெரியாமற்பேசுகிறாய் நில்லு-திருடன்
சித்தமதுதெளிந்துவரக் கர்த்தனேசொல்லு ௬௰௯

அவன்-பரியாசப்பேச்சுகள்சொன் னனே-நம்மைப்
படைத்ததொருபிரமன்வள்ளி யிடத்திலும்வாரானே ௬௨௰

நமக்கு-யோசனைகள்பிடிபடவு மில்லை-விட்டை
உற்றுநம்மவர்பார்க்கையிலேச் சற்றும்பழுதில்லை ௬௨௧

யிது-தேசமதிலிழிவான பேச்சு-நம்மவர்
சிறந்தவழிபார்க்கையிலே பறந்துகிளிபோச்சு ௬௨௨

இரவு-ஆளதியம்வந்துசோரம் போச்சு-அதுக
ளல்லாதமொழிகள்நிச மில்லாதபேச்சு ௬௨௩

வந்த-கோள்திருடன்வள்ளியேக்கை பற்ற-நாய்கள்
குலைத்ததுவும்இராவில்பல்லி யழைத்ததுவுமெத்த ௬௨௪

இரவு-பாதியிலேசிறையேஎடுத் திருப்பான்-நெட்ட
பாதைமலைகாடுயிரு காதமேநடப்பான் ௬௨௫

இனி-சேதியென்னஅடிப்பிறகே போடா-சேனை
திரட்டியேபடைஎடுத்து விரட்டியேவாடா ௬௨௬

வெல்லும்-படையெடுத்துவேடரு மெழும்பி-வள்ளி
பகவானுமிருக்குமந்த முகமேதிரும்பி ௬௨௭

93

வேடர்-நடந்துவரும்பாடையைவள்ளி கண்டாள்-தேகம்
நடுங்கியேவேலரிடமொடுங்கிநவில்கின்றாள் ௩௨௮

சாமி-மலைபோலும்வேடர்களும் வாறார்-துள்ளி
யடியாமற்குருதிரத்தங் குடியாமற்போகார் ௩௨௯

பாவம்-கொலைசெய்யும்வேடர்களு மஞ்சார்-மிக்கக்
குவலயத்திற்பாதத்தவர்கள் அவர்களுந்தான்மிஞ்சார் ௩௩௰

சாமி-தப்புவதும்காமினி யரிது-என்னைத்
தானேசாமிரக்ஷிக்க வேணுமதுபெரிது ௩௩௧

வள்ளி-அற்புதமேநீசொன்ன சொல்லு-அதுவும்
யாரையடிசொன்னாய்முதா கோறமதில்நில்லு ௩௩௨

அடி-பேதையரேமனக்கவலை தீரு-வள்ளிப்
பெண்ணாலேவரும்படையைக் கண்ணாலேபாரு ௩௩௩

மல்லு-வாதாடும்வேடர்களும் வந்தார்-சூழ்ந்து
வண்டாடும்பூஞ்சோலை கண்டுமேபுகழ்ந்தார் ௩௩௪

ஆளும்-ஒருவரைப்போலெழுவரைப்போற் தோன்றி-மெத்த
உயர்ந்தவனச்சோலையிலே யிருந்தார்வேலாண்டி ௩௩௫

நன்றாய்-தெரியுதிப்பஆளறவம் நீங்கள்-களவு
சிக்குதுஓடிநாலு பக்கமாய்வாருங்கள் ௩௩௬

நமக்கு-தற்கமுள்ளகள்வனிவ னென்றார்-வள்ளித்
தானுவேவேலர்முது கோறம்தில்கண்டார் ௩௩௭

வேடர்-கொக்கரித்துக்குலைவைகளு மிட்டார்-பரப்பிக்
கொட்டமிடேத்தட்டர்களும் வட்டஞ்சூழ்ந்திட்டார் ௩௩௮

குறவர்-வில்லம்பேஏவிவிடு வாரும்-தலை
விழுதடிகள்வீச்சரிவாள் வளரியெறிவாரும் ௩௩௯

மலை-கல்லுகளைவாரிஎறி வாரும்-கல்வான்
கல்லுகளைவேலரிடஞ் சொல்லியெறிவாரும் ௩௪௰

மன்னார்-ஏவிவரும்பாணமடி பணிய-விண்ணி
லேரிவருங்கல்கள்புஷ்ப மாரியாச்சொரிய ௩௪௧

குமர-தேவருமேசேவலை நினைக்க-அந்தச்
சேவல்வந்தபூமியிலே கூவியேகெக்கலிக்க ௩௪௨

புகழும்-தாரணிமேலோகமுங் குலுங்க-சேவல்
சத்தமதகேட்டுவேடர் செத்துமேமாங்க ௩௪௩

முனி-நாரதரும்நினைப்பாரு முன்னம்-வள்ளி
நாயகலரைச்சூடிவர முருகரிடஞ்சொன்னேனம் ௩௪௪

முருகர்-சேவலொலிகள்வரை ஏகினன்றார்-வேடர்
செத்ததையுங்கண்டுவேலர் கர்த்தனிடஞ்சென்றார் ௬௪௫

உம்பர்-தேவாதிதேவனே போற்றி-சாமி
திருமுருகாபரமசிவ குருமுருகாபோற்றி ௬௪௬

வருந்தி-பெற்றவர்கள்பிள்ளைதனைக் கொன்றால்-அந்தப்
பிள்ளைக்கும்வேறுதவி தொல்லுலகிலுண்டா ௬௪௭

வேடர்-குற்றமதுபொருத்துமேயிவ் வேளை-உயிர்
கூடவேணுஞ்சாமியேகொண் டாடவேணுமேழை ௬௪௮

வணங்கி-துதிசெய்தாராதர் விளம்ப-வள்ளிச்
சுந்தரியுங்கண்ணீருசிந்தியேபுலம்ப ௬௪௯

திகழும்-அதிமுருகாறுமுகத் தோடே-யீ
ராறுகரம்வேலுடனே கூறுவாரன்போடே ௬௫௦

நாரத-முனிவரையுங் கையாலமத்தி-அறிய
மொழியுளவள்ளியேநீ கேளடிசமத்தி ௬௫௧

வள்ளி-யினிமையுளமுகமேநீ திருப்பு-வேடர்
யிறந்தவர்பிழைக்கவாய் திறந்துநீயெழுப்பு ௬௫௨

முருகர்-அடிதொழுதுவள்ளியு மெழுந்தாள்-நல்ல
அடத்தினல்மாண்டவ ரிடத்திலேபுகுந்தாள் ௬௫௩

அழகு-வடிவேலர்செயலாலே நானும்-சொல்வேன்
மாண்டதொருவேடரெல்லா மீண்டுவரவேணும் ௬௫௪

யாரும்-படுத்தவர்கள் தூங்கிஎழுந் ததுபோல்-மூன்றாய்
பழமும்நல்லபால்தனிலே நழுவிவிழுந்ததுபோல் ௬௫௫

வீரத்-திடமுடனேவேடரு மெழுந்தார்-பொல்லா
தீதற்றுவிடும்வேலர் பாதத்தில்விழுந்தார் ௬௫௬

பழனி-ஆண்டவனார்செய்தவருக் கோலம்-ஏழை
அரியாதுகடைசிவழி தெரியுதனுகூலம் ௬௫௭

தேவை-வேணதரும்பாதமலர் தேடி-மனுக்கள்
மிக்கதவம்ஊசிமுனை நிற்கிறார்கோடி ௬௫௮

மூர்த்தி-முருகரேகிருபையதாகந்தீர்-சாமி
முந்திவள்ளிதனைத்தந்து பிந்திநீர்வந்தீர் ௬௫௯

பல-திருகுவழிசெய்யாமல் நீரே-எங்கள்
செல்விதனைக்கேட்டால்தடை சொல்வோமோநேரே ௬௬௦

நெடுக-காப்பாற்றுங்களாக்கும் பெண்ணு-பிர
காசமுடன்கொடுத்தோமணம் யோசனையாபண்ணும் ௬௬௧

கமழும்-பூப்பூக்குஞ்சிற்றார்க்கு ஈந்து-எங்கள்
புத்திரியேமணஞ்செய்ய சித்தமதாகத்து ௧௬௨

மெள்ள-வரவேணும்வையாபுரி வேலா-இந்த
வரமதுவேதரவேணும் பரமசிவபாலா ௧௬௩

ஏழை-தெரியாமல்நாங்கள்செய்த குற்றம்-சாமி
இருக்கானபிழைகளெல்லாம் பொருக்கவேணுஞ்சித்தம் ௧௬௪

நீங்கள்-செயம்பெருகும்வழியதுவே கேட்டீர்-நலம்
செப்பியேபெண்கேட்டா லொப்பித்தரமாட்டீர் ௧௬௫

நாளும்-நயமானவழிகள்செய்த தல்லால்-மனம்
நையுமொருவஞ்சனைகள் செய்யவில்லைபொல்லா ௧௬௬

ஒழுங்கு-சிஷ்டரையுங்காக்கவேணும் நம்பி-நம்மவர்
சீரானவள்ளிகதை வேறேயடா தம்பி ௧௬௭

பொல்லா-துஷ்டருக்குநல்மொழி ஏராது-யார்க்கும்
கூட்டிக்காட்டாதவித்தை-கட்டிலேவராது ௧௬௮

நீயும்-புத்திரியேவேண்டியறஞ் செய்தாய்-மானிற்
பொருந்தியேவள்ளியிவள் பிறந்திடவுஞ்செய்தோம் ௧௬௯

உன்றன்-சித்தமதாகலங்காதே வேந்தே-நம்மவர்
சீக்கிரமெழும்பியே சிற்றூர்புகுந்தே ௧௭௦

எனக்கு-வந்தவைசெய்துவள்ளியே அனுப்பு-பிறோ
வாருங்களென்றுவக் தார்குடியிருப்பு ௧௭௧

விளங்கும்-புதுமையுள்ளசாவனங்கள் நட்டார்-அதிலே
பூவாலேசோடினைகள் தாவியிலக்கிட்டார் ௧௭௨

கரும்பு-வாழைதெங்கு கமுகுகளைநட்டு-அழகு
மணிவிளக்குப்பதுமைகளை யணியணியாவிட்டு ௧௭௩

போட்ட-நீளதியகொட்டகைசிங் காரம்-அதற்கு
திகாரகவிபாழுடன் பகரவெருதாரம் ௧௭௪

தேக-சொகுசுதருமேலா சனங்கள்-விபரம்
சொல்லவேணுமென்றாலது செல்லும்நேரங்கள் ௧௭௫

அதிப-தகுதிவாசனைகள்தஞ் சேர்த்த-அமுது
காரம்பலகாரவகை நேரஞ்செல்லுஞ்சாற்ற ௧௭௬

உசந்த-பட்டுகளும்பரிதிபணங் காக-முனிப்
பாரியரசாணிகுப்பங் கூறதுவாலேச ௧௭௭

பெண்கள்-நடிப்பவருக்கேதவாத் தியங்கள்-நந்த
கல்லாநான்விரிவாகச் சொல்லச்சாத்தியங்கள் ௧௭௮

வெற்றி-விருதுடனேகட்டியம் பேட-முருகர்
விபரஞ்சொல்லிமங்கையர்கள் சோபனம்பாட ௬௭௯

நெறி-கருதுமறைவேதியர் படிக்க-ஓமக்
கனலையுமோராதமா முனிவரும்வளர்க்க ௬௮௰

முருகர்-சீரடியிலேமுடிகள் தாழ-உம்பர்
தேவர்களுமும்மூர்த்தி யாவர்களுஞ்சூழ ௬௮௧

நீண்ட-வாரதியதீபஞ் சொலிக்க-சிறந்த
மானிலம்புகழ்சாம்பி ராணிபுகைக்க ௬௮௨

செய்யும்-மணக்கோலமாணிடர் திருத்தி-சுப்ர
மண்யரைவள்ளியுடன் மணவரையிருத்தி ௬௮௩

பாதம்-பணிந்தரசன் தாரைசலம் வார்த்தான்-சிவ
பாத்திலேசிறந்தவேலர் கரத்திலேநீரேற்றான் ௬௮௪

முருகர்-வள்ளிகண்டமங்கிலியம் பூட்டி-நன்று
வாழ்த்தியேபூதிநெற்றி சாத்திமலர்சூட்டி ௬௮௫

கையால்-அள்ளிமலர்வானவர்கள் பெய்ய-சடங்
கானதுவேமங்களமாக் கானவர்கள்செய்ய ௬௮௬

வேடர்-பூரணமாயிருவரையுங் கூட்டி-மனம்
பொருந்தியமிஏறிவள்ளிக் கருந்ததியுங்காட்டி ௬௮௭

பெண்கள்-சீராட்டிஊஞ்சலில்வைத் தாட்டி-பாலும்
தேன்பழமமுதூட்டித் தீபதூபங்காட்டி ௬௮௮

ஒழுங்கு-யிசையும்பங்காவிசிறிகளும் வீசி-அதிலே
யின்னதியசோடசங்கள் சொன்னோனைரவாசி ௬௮௯

எட்டுத்-திசைபுகழுந்தேவர்க ளகன்றார்-நாளுஞ்
சேமநல்குமூன்றுநாள் சாமியுஞ்சொல்கின்றார் ௬௯௰

மலை-கானரசேவள்ளியே அனுப்பு-புதுமை
கண்டுநலம்பெற்றாயின்ன முண்டோ-சலுப்பு ௬௯௧

சாமி-மானின்றவள்ளியவுங் காத்து-முருகர்
மங்களமாஎங்களையுங் கண்களாற்பார்த்து ௬௯௨

கோவே-கேட்டவரமெல்லாமுனக் கிந்தும்-உன்னைக்
கீர்த்திபெறவைத்துநீயும் பார்க்கவும்நான்வந்தும் ௬௯௩

அரசே-பாட்டுகவிபடிக்காதே நில்லு-என்ன
பைத்தியமோஎன்னையும்நீபோய் விட்டுவரச்சொல்லு ௬௯௪

முன்பு-குலதெய்வமாகவே யிருந்தும்-பெண்ணைக்
கொடுத்தெனக்குமா[illegible]லனு அடுத்துமேசிறந்தும் ௬௯௫

நல்ல-பலனுதவும்வழியதுவா கேட்டாய் யிந்தப்
படிவரைக்கும்நம்மையும் படிப்பார்கள்பாட்டா ௬௰௬
மண-மங்களமாயிருவரு மெழுந்தார்-குற
வஞ்சியும்வேடர்களுங் கெஞ்சியே தொடர்ந்தார் ௬௰௭
சிறந்த-அங்கமுள்ளவாழிகவி பாடி-காடு
அடர்ந்தமலைதன்னிலே நடந்தார்வழிகூடி ௬௰௮
யிருவர்-வேடரைகிறுத்தியே பறந்தார்-யார்க்கும்
விருப்பமுள்ள திருத்தணிகை பொருப்பிலேயிருந்தார் ௬௰௯
யாரும்-நேடரியமலைச்சிறப்பு வள்ளி-நன்றாச்
செப்பவேசொன்னதற்குஞ் சுப்பராயர்சொல்லி ௭௰
அவடம்-சிலகாலஞ்சென்றுமன மீறி-சாமி
சித்தமதுபோலேவி மானத்திலையுமேறி ௭௰௧
வேண்டும்-நலமுதவுங்கந்தமலை சென்றார்-அங்கு
நாடியதெய்வானையவ ளோடிவந்துகண்டாள் ௭௰௨
கந்த-சாமியைத்தெய்வானைபணிந் திட்டாள்-வள்ளி
தானேதயவாகத்தெய் வானையைக்கும்பிட்டாள் ௭௰௩
உயர்ந்த-மாமணித்தெய்வானையுமே பார்ப்பாள்-பொழியும்
வையாபுரிக்குமரரையும் ஒய்யாரமாக்கேட்டாள் ௭௰௪
மோக-நாதனேசிறையுமெடுத் தீரா-எனக்கு
நாடிபணிவிடைசெய்யத் தேடியேவந்தீரா ௭௰௫
ஊரும்-சாதிபெயரிவளுமே யாரையா-என்றுச்
சாற்றவேணும்லோகமெல்லாம் பூத்தமுருகையா ௭௰௬
எந்தன்-அளப்பரியக்கேட்டாய்தெய் வானை-சேதி
ஆர்க்குமிதுதெரியுமடி தீர்க்கமாச்சொல்வேனே ௭௰௭
சேதி-ஒழுக்காமற்சுருக்கமாச் சொல்வேனே-வள்ளி
வளமையதுநீமுப்பு யிளமையிவள்தானே ௭௰௮
அரி-மாயவனார்பெற்றஇரண்டு கண்ணை-என்னை
மருவவேணுமென் றுதவ மிருந்தீர்கள்முன்னே ௭௰௯
உலை-ஆயும்புகழிந்திரன்வெள் ளானை-உன்னை
அடுத்தெடுத்த துயிந்திரன்பெயர் கொடுத்துவளர்ந்தானே ௮௰
தெற்கே-திருப்பரங்குன்றமதி லொன்னை-நானும்
திருமணஞ்செய்ததுவுந் தெரியாதாமுன்னை ௮௰௧
நானும்-விருப்பமுடனிவள்தவத்து முன்னால்-என்ன
வேணுமென்றுகேட்டேன்கலி யாணஞ்செய்யச்சொன்னாள் ()

தவம்-முற்றுஞ்சிவமலையிலே பொருந்தும்-சிவ
முனியாலேமான்வயிற்றிற் செனித்துநீபிறந்தும் ௭௧௩
திரு-புத்திரியும்வேண்டியேசிற் றாரு-அரசு
புரியுங்குமராசனவன் குறவரிடஞ்சேரு ௭௧௪
நானும்-வந்துமணம்புரிவேனென்று சொன்னேன்-தவனை
வந்துபோய்மாலைசூடி வந்தனடிபெண்ணே ௭௧௫
சொன்ன-அந்தமுள்ளபேச்சும்விளை யாட்டா-என்னை
அதட்டியேதெய்வானை பதட்டமாய்க்கேட்டாய் ௭௧௬
நீதி-ஆகாதகாரியமோ வள்ளு-நீயும்
ஆயிரமாயிருந்தாலும் வாய்பதரிதள்ளு ௭௧௭
நல்ல-வாகானபுருடருட சேதி-பெண்கள்
வணங்கவேணுமல்லாமற் பிணங்கலாமோநீதி ௭௧௮
சாமி-தாபதமேஎன்றுஎழுந் தாளே-வலிமை
சத்திதெய்வானைதிரு சுற்றிப்பணிந்தாளே ௭௧௯
நானுங்-கோபமில்லாக்குமாருரு மூர்த்தி-நானும்
குற்றமதாச்சொன்னாலுஞ் சித்தமதிலாற்றி ௭௨௰
முருகர்-வாக்கிலேயுந்தவறுகிறமொழி ஏது-திரு
வாக்குமணமில்லாமல் பூக்கிறதுமேது ௭௨௧
சாமி-தாக்கல்தெரியாமலேநான் கேட்டேன்-எந்தன்
தந்தையென்றுந்திரிந்துமினிப் பங்கஞ்சொல்லமாட்டேன்
மோக-நங்கையரோயிருபேரும் வாருங்கள்-அடி
காரியரோஒருசேதி கூறுவேன்கேளுங்கள் ௭௨௩
நானும்-மங்காதமணியிலொளி போலும்-எங்கும்
மலர்ந்திட்டதண்ணீரிற் கலந்திட்டபாலும் ௭௨௪
அநிய-கூரானஉடலிலுயிர் போலும்-நல்ல
குணம்பொருந்துமலர்தனிலே மணமிருந்தாற்போலும் ௭௨௫
எங்கும்-நேராகநாமுங்கூ டிருப்போம்-நம்மை
நினைப்போர்க்குந்தொழுவோர்க்கும் வினையேவேரறுப்போம்
கலவு-சொல்லியரியாசனமு மேதி-முருகர்
துய்யவிருமாதரையுங் கையாலேவாரி ௭௨௭
இரண்டு-மெல்லியரையிருமருங் கமைத்தி-வந்த
வெடியகற்றும்படிசேவற் கொடியுங்கிறுத்தி ௭௨௮
முருகர்-ஆறுமுகம்பனிரெண்டு கையும்-வேலும்
அறந்திட்டமயிலுமெங்கும் சிறந்திட்டமெய்யும் ௭௨௯

கமழும்-வார்கவரிமங்கையர்கள் வீச-சிலர்
வணங்கியேவாய்பொத்தி யிணங்கிசிலர்பேச ௭௩௰
வீரம்-கட்டியமதட்டிஒலி போட-யிசை
கதிமிகுந்தகவிஞர்வளர் துதிமிகுந்துபாட ௭௩௧
சிலர்-மடந்தையர்கள்சிறந்துநட மாட-நீண்ட
மங்களவேதியர்கள் சங்கீதம்பாட ௭௩௨
முனிவர்-வாசவனுமும்மூர்த்தி கூட-சுக
மானதொருநாரதரும் கானயிசைபாட ௭௩௩
இன்பம்-ஆசைமுரசாணமணி பேச-வேதன்
அந்தமுள்ளதிருநீறுஞ் சந்தனம்பூச ௭௩௪
முத்துக்-கனகமணிகுடைமதி பிடிக்க-கருட
கந்திருவர்சூழ்ந்துமே யிருந்துகால்பிடிக்க ௭௩௫
மிகுந்த-தனகுபேரன்கைபணி திருத்த-தருமர்
தாகமுடனுடுப்புவேலர் தேகமேபோர்த்த ௭௩௬
அப்பு-வருணன்வந்துபன்னீர் தெளிக்க-காற்று
வந்துமேவசந்தவனுங் குளுந்துமேயடிக்க ௭௩௭
மூன்று-திரிமூர்த்திமங்கையர் கதிக்க-நந்தி
சித்தரும்ரிஷிமுனிவர் முத்தர்கள்துதிக்க ௭௩௮
தேவர்-சூரியனுமக்கினி சிறக்க-வீசும்
தூபமுஞ்சோடசமுந் தீபமுந்துலக்க ௭௩௯
குமரி-நாரியருமாலாத்தி ஏந்த-பெண்கள்
நாடிசிலர்சோபனமும் பாடியேவருந்த ௭௪௰
மற்ற-தேவர்மலரள்ளியே சொரிந்தார்-சில
தேவர்களும்வேலரடி மேவியேபணிந்தார் ௭௪௧
மகிழ்ந்-தாவலுடனமுதுபடைப் பாரும்-சிலர்
ஆங்குயிலைபாக்கீந்து தேங்காயுடைப்பாரும் ௭௪௨
முத்தி-பூதிபிரசாதம்கீத மீந்தும்-வானப்
பொன்னுலகமண்ணுலக மின்னும்படிவாழ்ந்தும் ௭௪௩
ஒரு-மாதமும்மாரிமழை பெய்ய-நாளும்
மாட்சிமையில்லாதஅற சாட்சிநிதஞ்செய்ய ௭௪௪
மனு-மக்கள்சம்பத்துநிதங் கூட-செய்த
வல்வினைகளானபிணி சொல்லாமலோட ௭௪௫
வரும்-தக்கமுள்ள துக்கமது மாற-அரி
சங்கநிதிபதுமநிதி பொங்கிவளர்ந்தேற ௭௪௬

மன-வஞ்சனைகள்சூதுகளில் லாமல்-யிந்த
வையமதில்பழிகளவு பொய்யதுசொல்லாமல் ௭௪௭

அஞ்சு-பஞ்சமாபாதகம் விடுத்தும்-வயிற்
பசிக்கமுதுநன்மைசொல்லிப் பொசிக்கவேகொடுத்தும் ௭௪௮

அன்ன-சத்திரமுஞ்சாவடி துலங்க-சோலை
தடமிகுதேவாலயமுந் திடமுடனிலங்க ௭௪௯

உருதி-சத்தியமும்பற்றிகரந் தாங்க-பேசுஞ்
சதுர்மறைகள்தானதர்மம் நிதமும்வளர்ந்தோங்க ௭௫௰

விளங்கும்-திட்டமுள்ளசெங்கோலுங் கீர்த்தி-முருகர்
திருந்தவேவகமெல்லா மிருந்தார்குருமூர்த்தி ௭௫௧

ஞாயம்-கட்டுமெட்டானதொரு பேச்சு-வள்ளி
கதையிதையும்விடவேறே விதமுமுண்டாச்சு ௭௫௨

புகழும்-தேன்சொரியுமானந்த வாறு-மனத்
தேட்டமுடன்கேட்டாய்குமிப் பாட்டையும்நீபாரு ௭௫௩

பூமி-வான்சிறந்தவள்ளிகதை வாழ்க-இன்னம்
வானவருந்தானவருங் கானவரும்வாழ்க ௭௫௪

நம்ம-குருவானகணபதியும் வாழி-சத்தி
குமறன்வள்ளிதெய்வானை கமலதிருவாழி ௭௫௫

சங்-அரனுமதிவிதிசோதி வாழி-வாணி
அரியுமெட்டுத்திசைபாலர் பெரியோரும்வாழி ௭௫௬

அன்பு-சைவநெறிதிருபூதி வாழி-உண்மை
சத்திவைரவன்வீரபத்திரனும்வாழி ௭௫௭

யிந்த-வையகமுமாசாத்தன் வாழி-கதை
வாசித்தோர்கதனையும் பூசித்தோர்வாழி ௭௫௮

## வள்ளியம்மை சுயம்வர

### ஆனந்தக்களிப்பு

முற்றிற்று.

---

119170

உ

கடவுள் துணை.

# நூதன புத்தக விளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பதியாதெனில்! இந்தபுஸ்தகங்களும், மற்றபுஸ்தகங்களும், இதனடியில் கண்ட விலாசதாரிடம் நேரிலும், வி. பி. போஸ்டிலும் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொருபுஸ்தகத்திலும் 10-புஸ்தகம் வாங்கினால் 1-புஸ்தகம் இனாமாகக் கொடுக்கப்படும்.

| | ரூ. | அ. | | ரூ. | அ. |
|---|---|---|---|---|---|
| பிரபஞ்சசொருபத்தி | 2 | 0 | சோதிடசிரசுஞானதீபிகை | 2 | 0 |
| சரீரசாஸ்திரம் | 0 | 8 | அகஸ்தியர் 1200 | 1 | 8 |
| சகுனசாஸ்திரம் | 0 | 4 | மணிமந்திரவைத்தியசேகரம் | 1 | 0 |
| குதிரைலக்ஷணசாஸ்திரம் | 0 | 4 | பீதாம்பரய்யர்ஜாலம் | 0 | 8 |
| பதிவிரதைகள்சரித்திரம் | 0 | 12 | சுக்கிரநாடிசோதிடஆனந்தமாலை | 0 | 6 |
| பூலோகசமுத்திரகதை | 0 | 12 | விநாயகர்சதகம் | 0 | 2 |
| அம்பலவாணர்கதை | 0 | 10 | சந்திரகாசன்கும்மி | 0 | 1 |
| உலகநீதிசித்திரகதை | 0 | 12 | கல்லாடக்காரன்கும்மி | 0 | 2 |
| கண்டோர்கள்கதைகள் | 0 | 8 | சாசாங்குசிந்தாமணி | 0 | 1 |
| பெரியநாட்டாண்மைப்பஞ்சு | 1 | 0 | சித்திராங்கிபாடிகதிதம்பித்ருந்திகள் | 0 | 8 |
| அகடவிகடசம்பாஷி | 0 | 4 | வேதாந்தபோதினிகாருண்ணியம் | 0 | 8 |
| கொக்குப்பிரியர்பும்பந்தம் இடைஅசையம் | 0 | 6 | மனைவிலாசகதை | 0 | 8 |
| | | | சுந்தரிகதைகள் | 0 | 12 |
| மூவர்பாருப்பாண்டித்தம் | 0 | 4 | நாயகிகொலைசித்தரிப்பாடல் | 0 | 2 |
| வியாசர்விபரீதம் | 0 | 4 | கொழுனிளைஇளந்தகொவிதை | 0 | 4 |
| கண்டபேவித்தை | 0 | 8 | உவிக்கிதாவிசட்டியகதை | 0 | 4 |
| ஷை 2-சுதிராகம் | 0 | 8 | விகடபலபட்டிரட்டு | 0 | 4 |
| நாரதர்கலகம் | 0 | 6 | ஷை 2-வதுபாகம் | 0 | 3 |
| ஷை 2-வதுபாகம் | 0 | 4 | ககாவிகடமஞ்சரி | 0 | 2 |
| தெய்வகுணவேகலித்தம் | 0 | 8 | விகடபலவிதயரிட்டு | 0 | 2 |
| நூதனகவியாணபாட்டு | 0 | 3 | காமருபிகதை | 0 | 6 |
| பொலீகழுக்கட்டு | 0 | 4 | சித்திரகவியம்அருட அலங்காரம் | 0 | 12 |
| 1008திவ்வியவேதநைபத்தியம் 1-வது ஆட்டம் | 0 | 12 | ஷை அருட்சிரதம் | 0 | 10 |
| | | | சர்வசிவலங்கும்பவன் | 0 | 4 |
| திருமணவிரசட்டம் | 1 | 0 | திருட்டுபிடிக்கும்கணவுசாஸ்திரம் | 0 | 4 |
| இங்கிலீஷ்பூமிவைத்தியம் | 2 | 0 | கோமளவல்லித்தாயார்திருக்கல்யாணகீர்த்தனை | 0 | 8 |
| சபத்தரிவிசாலம்-5500-பாட்டு | 3 | 0 | | | |
| மச்சகேளலம்பரம்சேகரியம் | 1 | 4 | பக்கதிநிலைசனம் | [illegible] | 4 |

விலாசம்.

☞ அ. மாமுண்டிப்பாபிள்ளை,

புக்செல்லர்,

திருச்சினாப்பள்ளி.